விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 கார்த்திகை 7 ஸபர் 6 இதழ் 283

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 23—11—82

### நித்தி-நிர்மலாவை விடுதலை செய்யுமாறு
## பல்கலைக்கழக ஆசிரியர்சங்கம் ஜனாதிபதிக்கு கோரிக்கை!

[யாழ்ப்பாணம்]

யாழ் பல்கலைக்கழக பொருளியல்துறை விரிவுரையாளரும், பல்கலைக்கழக ஆசிரியர் சங்க உறுப்பினர்களுள் ஒருவருமான திரு. ரி நித்தியானந்தனும், அவரது துணைவியாரான நிர்மலா நித்தியானந்தனும் கைதுசெய்யப்பட்டமுறை பற்றியும், குருநகர் இராணுவ முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டமை பற்றியும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கவலையும் வருத்தமும் தெரிவித்து ஜனாதிபதிக்கு அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க விசேட கூட்டம் நேற்று சங்கத் தலைவர் பேராசிரியர் எஸ். வி. பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தின்பின்னர் இது சம்பந்தமான ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டு ஜனாதிபதி, எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம், உயர் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஸ்ரான்லி கல்பகே, வடபகுதி இராணுவ முகாம்களின் பொறுப்பதிகாரி

(8-ம் பக்கம் பார்க்க)

### ★ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி
# ஆசிரியர் சம்பளம் ரூ. 47,000
# துப்பாக்கி முனையில் கொள்ளை!

## சைக்கிள் இளைஞர்கள் மூவர் கைவரிசை!

### இயந்திரத்துப்பாக்கி வைத்திருந்தனராம்

(சுழிபுரம் நிருபர் கா. வாமதேவன்)

**சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியர்களின் சம்பளப்பணம் 47 ஆயிரம்ரூபாகல்லூரி அதிபர் காரியாலயத்தில் வைத்து மூன்று இளைஞர்களால் துப்பாக்கி முனையில் நேற்றுப்பிற்பகல் கொள்ளையடிக்கப்பட்டது.**

55 ஆசிரியர்களின் சம்பளப்பணமான 47 ஆயிரம் ரூபாவை அதிபர் காரியாலயத்தில் வைத்து ஆசிரியர்களான சி. தியாகராசா, முத்துக்குமாரசாமி சர்மா ஆகியோர் பங்கீடுசெய்துகொண்டிருந்தபோது இச்சம்பவம் நடந்ததாகக்கூறப்படுகிறது.

பிற்பகல் 2-30மணியளவில் 2 சைக்கிளில் வந்த மூன்று இளைஞர்கள் துப்பாக்கி முனையில் இக்கொள்ளையை நடத்தியுள்ளனர்.

ஒருவர் சாரமும், இருவர் நீள காற்சட்டையும் அணிந்திருந்தனராம். ஒருவர் இயந்திர துப்பாக்கியும் இருவர் கைத்துப்பாக்கிகளும் வைத்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

துப்பாக்கி முனையில் 47,000 ரூபாவையும் கொள்ளையடித்த பின்னர் ''அரைமணித்தியாலம் வரை இது பற்றி எவருக்கும் அறிவிக்கக்கூடாது'' என்று எச்சரித்துவிட்டு 3 இளைஞரும் இரண்டுசைக்கிளில் சென்றனராம்.

சம்பவம்நடைபெற்றபோது அதிபர் காரியாலயத்திற்கு அடுத்த அறையில் 4 ஆசிரியர்களை இளைஞரில் ஒருவர் துப்பாக்கி முனையில் பயமுறுத்திக் கொண்டிருந்ததாகவும், அச்சமயம் இலவசபுத்தகம் வழங்குவதற்காக வேறு பாடசாலை ஆசிரியர் சிலரும் அங்கு வந்திருந்ததாகவும் மாணவர்கள் பரீட்சைமண்டபத்தில் பரீட்சை எழுதிக் கொண்டிருந்ததாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தின் பின் இளைஞர்கள் தொலைபேசி வயர்களைத் துண்டித்ததாகவும் கூறப்படுகிறது.

கல்லூரிக்கு 100யார் தூரத்திலுள்ள சுழிபுரம் தபால் கந்தோரிலிருந்து அதிபர் சம்

[8-ம் பக்கம் பார்க்க]

## நீர்வேலி கொள்ளை வழக்கு: ஆட்சேபனை நிராகரிப்பு

(கொழும்பு)

''குற்றப் பத்திரிகையில் குறிக்கப்பட்டகைவிரல் அடையாள நிபுணரின் சுருக்க அறிக்கையின் ஒரு பகுதியே இப்போது சமர்ப்பிக்கப்பட்ட விளக்க அறிக்கை என்று கருதுகிறேன். எனவே இதனை ஏற்றுக்கொள்ள முடியும் என்று உத்தரவிடுகிறேன்.''

நீர்வேலி வங்கி கொலை - கொள்ளை வழக்கில் எதிரி தரப்பில் கைவிரல் அடையாள நிபுணரின் விளக்க அறிக்கையை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்ற ஆட்சேபத்தை நிராகரித்து நீதிபதி மூனமாலே மேற்கண்டவாறு தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. சி என். ரி. மூனமாலே முன்னிலையில் நடைபெற்று வருகிறது.

அரசதரப்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் கைவிரல் அடையாள நிபுணரின் விளக்க அறிக்கையை சமர்ப்பித்தபோது, அந்த அறிக்கையை ஒரு சாட்சியமாக சமர்ப்பிக்கப்படுவதை எதிரி தரப்பு சட்டத்தரணி என். சந்தியேந்திரா கடந்த தவணையின்போது ஆட்சேபித்திருந்தார்.

நீதிபதி தீர்ப்பில் விளக்க அறிக்கை சாட்சியமாக சமர்ப்பிக்கப்பட்டால் அச்சமயம் எதிரி தரப்பில் ஆட்சேபிக்கலாம் என்றும் தெரிவித்தார்.

[இ]

## பஸ் விபத்து 4 பேர் பலி

புதுடில்லி, நவ. 22

உத்தரபிரதேசத்தில் இடம் பெற்ற பஸ் விபத்தொன்றில் 4 பேர் ஸ்தலத்திலேயே பலியானதாக அறிவிக்கப்பட்டது.

[வெ]

### காலி அசம்பாவிதங்கள்:
## ‘கடைக்குவந்தவரை நான் குத்தவில்லை’
### அலஸ்விசாரணையில்சாட்சியம்

[காலி]

''கடைக்குவந்த ஒருவரை நான் குத்தவில்லை. கத்தியை வீசினேன். அவர் என்கன்னத்தில் அறைந்தபின்தான் கத்தியை வீசினேன்.''

காலியில் நடைபெற்றுவரும் அலஸ் விசாரணைக்குழு முன் சாட்சியமளித்த விஜயசேகரா மேற்கண்டவாறு கூறினர்

சட்டத்தரணி ஜனாப் எம், எம். சுபைர் குறுக்குவிசாரனை செய்தார்.

காலியில் நடைபெற்ற சம்பவம் இக்கத்திக்குத்து சம்பவத்தைத் தொடர்ந்து நடைபெற்றதாக சட்டத்தரணி சுபைர் தெரிவித்தார்.

சாட்சி: நான் குத்தவில்லை. கத்தியை வீசினேன்.

சட்டத்தரணி; தலையில் 2 கத்திக்குத்துக்காயம் இருப்பதாக சட்டவைத்திய அறிக்கை கூறுகிறது. [அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இ. போ. ச.விலிருந்து நீர் நீக்கப்பட்டு, இனிமேல் எந்த அரசுபதவிக்கு வந்தாலும் உமக்கு வேலை வழங்குவதில்லை என இ போ, ச. தலைமைபீடம் முடிவுசெய்துள்ளது. நீர் முன்பு இங்கு சாட்சியமளித்த போது விலாசம் தாக கூறினீர் அதுஒருபொய்யாகும் சரீபத் கடைசந்தியில் நீர் மட்டும்தான் ஒரு சிங்கள

(8-ம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரி
## மாணவர்கள் வகுப்புகளை பகிஷ்கரித்தனர்!

(மட்டக்களப்பு நிருபர் இரா, துரைரத்தினம்)

கடந்த 15ம் திகதி மூடப்பட்ட மட்டக்களப்பு பல்கலைக்கழககல்லூரி மீண்டும் நேற்று திறக்கப்பட்ட போதிலும் மாணவர்கள் எவரும் வகுப்புக்கு செல்லாது பகிஷ்கரித்தனர்,

கடந்த திங்கட்கிழமை பல்கலைக்கழக கல்லூரி பணிப்பாளருக்கும், மாணவர் பேரவைத் தலைவருக்குமிடையே ஏற்பட்ட பிரச்னையை அடுத்து பல்கலைக்கழகக் கல்லூரி மூடப்பட்டிருந்தது,

நேற்று பல்கலைக்கழகக் கல்லூரி திறக்கப்பட்ட போது மாணவர் பேரவையை அவமதிக்கும் வகையில் பணிப்பாளர் நடந்துகொண்டதாகவும், தமது கோரிக்கைகளை ஏற்கத் தவறியதாலும் தம்மைத் துப்பாக்கி முனையில் வெளியேற்றினர் என்றும் எனவே மேற்படி மாணவர்பேரவையை அவமதிக்கும்வகையில் நடந்துள்ள நிர்வாகத்தினர் தம்மிடம் மன்னிப்புக் கோரவேண்டுமென்று கோரி மாணவர்கள் வகுப்புக்

(8-ம் பக்கம் பார்க்க)

## உணவு முத்திரைகள்

[கொழும்பு]

பத்தாவதுதொடர் உணவு முத்திரைகள் அடுத்தமாதத்திலிருந்து நடைமுறைக்கு வரவுள்ளது உணவு முத்திரைகள் பெறும் 72 லட்சம் பேருக்கு இவை வழங்கப்படவுள்ளன

[வெ]

### யாழ். பல்கலைக்கழக
## மாணவர்கள் பகிஷ்கரிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த துணை விரிவுரையாளரும், ஒரு மாணவனும் இராணுவத்தினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டதை ஆட்சேபித்து, யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று வகுப்புகளை பகிஷ்கரித்தனர்.

நேற்று நடைபெற்ற யாழ். பல்கலைக்கழகமாணவர் அவைக் கூட்டத்தில் தொடர்ந்த என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்தும் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிகிறது. [மா]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

C D 185 Honda (ரேட்மாஸ்ரர் மோட்டார் சைக்கிள் 28-11-82 வரை விற்பனைக்கு உண்டு C 90க்கு மாற்றமும் செய்யலாம் நா. தர்மலிங்கம், ''தர்ம இல்லம்,', கந்த ரோடை, சுன்னுகம். (5246)

---

அடைவு கடைகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் வீட்டுப்பாவனைக்கும் உகந்தது மான திண்டுக்கல் இரும்புப் பெட்டிகள் கைவசம் உண்டு. எவர்சில்வர் மாளிகை, நிர். 11, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (5247)

---

தொலைபேசிக்கான பூட்டுக்கள் விற்பனைக்குண்டு. தடன்லப் ஸ்ரோர்ஸ், 234 (446) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5224

---

நல்லநிலையிலுள்ள 10 H. P, U. K., A C மோட்டர் ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி S. கந்தையா, சித்திரமேழி, இளவாலை. 5191

---

நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட ஹொண்டா மோட்டர் சைக்கிள்கள் C/90, C/70 Delica வான்கள் 1979 மொடல் ELF டிரக்குகள் மலிவாகக் கிடைக்கும். நா. சாம்பசிவம் அன்கோ, 54, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம், T. P. 22454. (5218)

---

பசு மாடுகளும், பசுக்கன்றுகளும் பட்டிமூடுவதால் விற்பனைக்குண்டு. இவை யாவும் நல்ல இனங்களும் நன்ருக பராமரிக்கப் பட்டவைகளும். சு. பாலேந்திரா, நெடுங்குளம் சந்திக்கருகாமையில் இருக்கும் தொழிற்சாலை) 586 கண்டி ரோட், அரியாலை, யாழ்ப்பாணம். 5229

---

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில்

மூதூர் பிரதான வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற வெள்ளைச்சாமி மூத்தையா என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர் மூத்தையா கைம்பெண் பாக்கியலட்சுமி, 7-ம் வட்டாரம், பிரதானவீதி, மூதூர்.

மனுதார்

மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல. 553

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப் பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982-ம்ஆண்டுமார்கழி மாதம் 13ஆம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக்காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்ருர்.

நீதிமன்றக் கட்டளைபடி
கா. மகேந்திரராசா,
பதிவாளர்.

1982-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 16-ம் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது. (5226)

---

## சமாதான நீதவானுக்கு பாராட்டு

(மாவிட்டபுரம்)

''சமாதான நீதவானுக நியமனம் பெற்றுள்ள திரு. மு. முத்துலிங்கம் சமூகசேவைக்கு பெயர் போனவர் தமது சேவையில் குறுக்கீடு செய்பவர்களையும் தமது சிரிப்பாலே வசமாக்கி சமூக சேவையில் வெற்றிகண்டவர், இவர் போன்று பல சமூக சேவையாளர்கள் உருவாக்கவேண்டும்'' என்று தெல்லிப்பழை மடத்தடியைச்சேர்ந்த திரு. முருகேசு முத்துலிங்கம் சமாதான நீதவானுக நியமனம்பெற்றதை யொட்டி கோண்டாவில் விவேகானந்தா படிப்பக சனசமூகநிலையம்எடுத்த பாராட்டு விழாவிற்கு தலைமை வகித்து பேசிய மேற்படி நிலையத்தலைவர் திரு. ச. சின்னையா கூறினர்.

பாராட்டுப்பத்திரத்தை வாசித்தளித்து அவர் மேலும் பேசுகையி, ''திரு முத்துலிங்கம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பழையமாணவரும் தெல்லிப்பழை கிராமசபையின் முன்னுள் உபதலைவரும் மாவை பாரதி சனசமூக நிலைய மாவைக்கந்தன் தண்ணீர்ப்பந்தல் ஸ்தாபக உறுப்பினரும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பெற்ருர் ஆசிரிய சங்க முன்னுள் செயற்குழு உறுப்பின ஆவார். அத்துடன் தெல்லிப்பழை ஐக்கிய வைத்தியசாலை உறுப்பினராகவும், தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்கநிலைப்பள்ளி அபிவிருத்திச்சபை செயற்குழு உறுப்பினராகவும், மாவிட்டபுரம் பேய்ச்சியம்மன் ஆலய பூசகராகவும், பரிபாலகராகவும்இருந்துஅரியசேவையாற்றி வருகிருர், இவரது சேவை மேலும் சிறப்புற வாழ்த்துகிருேம்'' என்ருர்.

இவ்விழாவில் கோண்டாவிலைச்சேர்ந்த சமாதான நீதவான் திரு. சுப்பர் சுந்தரத்தையும் பாராட்டி கௌரவம் அளிக்கப்பட்டது.

---

## வலி. வடக்கிலும் கோதுமை உற்பத்திமுயற்சி

(மாவிட்டபுரம்)

வட பகுதியில் கோதுமையைப் பரீட்சார்த்தமாகப் பயிரிடத் திட்டமிடப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கமையவே வலி. வடக்கிலும் கோதுமை உற்பத்தியைப் பரீட்சார்த்தமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

ஒரு இருத்தல் நிறையுடைய கோதுமைவிதை பைக்கற்றுகளையும் அதற்குத்தேவையான உரம், பசளை வகைகளையும் விவசாய விசாலிப்பு சேவையாளர்கள் விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகித்து வருகிருர்கள்.

தொடர்பு கமக்காரர்கள் மூலமாகக் கிராமங்களிலுள்ள சிறந்த விவசாயிகளைத் தெரிவு செய்து அவர்களுக்கே இப்பொருட்கள் வழங்கப்படுகின்றன.

மூன்று மாதத்தில் அறுவடை செய்யக்கூடிய இந்த நல்லினக் கோதுமை ஒரு 'பைக்கற்' 200 சதுர அடி நிலத்தில் பயிரிடப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ள விவசாய விசாலிப்பு சேவையாளர்கள் இதற்கான ஆலோசனைகளையும் வழங்கிவருகிருர்கள்.

கோதுமை உற்பத்தி வடக்கில் வெற்றிகரமாக அமைந்தால் மேலும் கூடியளவு கோதுமை உற்பத்தி மேற்கொள்ளப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

---

ஐக்கிய குடும்பங்கள் ஸ்தாபனத்தின் ஆதரவில்

# யூனிபோ - UNIFO

* உருக்கு அலுமாரிகள்
* மேசைகள்
* மற்றும் அலுவலக, வீட்டு உபயோகத் தளபாடங்களின்

யூனிபோ விற்பனைநிலையம் காட்சியறை

## திறப்பு விழாவில்

கலந்துகொண்டு வாழ்த்திய அன்பர்களுக்கும், சாவகச்சேரி வர்த்தகப் பெருமக்களுக்கும், நிறைய ஓடர்கள் தந்து எம்மை ஆதரித்த பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் திறப்புவிழா சிறப்பாக நடைபெற உதவிகள் செய்து ஒத்துழைத்த நண்பர்களுக்கும் எமது அன்பையும் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிருேம்.

இளையதம்பி வெற்றிவேலு,
நிர்வாக இயக்குநர்,

ஐக்கிய குடும்பங்கள் ஸ்தாபனம்
வேம்பன் வீதி, உரும்பிராய்.

---

# ரூ. 2லட்சம் நகைகள் கொள்ளை

(சரவெட்டி)

காங்கேசன்துறையில் கருகம்பனைஎன்னுமிடத்தில் ஒருவரின் வீட்டில் நேற்று முன்தினமிரவு இரண்டு லட்ச ரூபா பெறுமதியான நகைகளும், உடைகளும், ரொக்கப் பணமும் கொள்ளையிடப் பட்டுள்ளன.

கதிரிப்பிள்ளை குமாரசாமி என்பவரின் வீட்டிலேயே அவரது அறையின் யன்னல் உடைக்கப்பட்டு கொள்ளை நடந்திருக்கிறது.

காங்கேசன்துறை பொலிஸார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

---

## யாருடைய 'மணிபர்ஸ்'?

ஒரு தொகை பணத்துடன் கூடிய 'மணிபர்ஸ்' ஒன்றை வீதியில் கண்டெடுத்து யாழ். முஸ்லிம் கல்லூரி வீதியைச் சேர்ந்த ஏ. அஸன் என்பவர் 'ஈழநாடு' காரியாலயத்திலொப்படைத்துள்ளார். உரியவர் காரியாலய நேரத்தில் வந்து அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

---

## ஐ. தே. க. யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளர்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளராக திரு கே. கணேசலிங்கம் கட்சியின் தலைமைப் பீடத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சித்தலைவர் திரு. என். டி. பண்டிதரத்ன தலைமையில் சிறீகோத்தாவில் நடைபெற்ற கூட்டத்தில் யாழ் மாவட்ட அமைப்பாளர்களின் கூட்டம் நடைபெற்றது.

ஜனுதிபதி திரு ஜே ஆர். ஜயவர்த்தன, செயலாளர் திரு. அபேவர்த்தன, திரு. ஆர். ஆர். நலையா ஆகியோரும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

யாழ் மாவட்டத்திலிருந்து பதினெரு தொகுதிகளுக்கும் முன்னர் தெரிவு செய்யப்பட்ட அமைப்பாளர்களில் திருவாளர்கள் போகேந்திரா துரைசுவாமி, கேதீஸ்வரன், ஜி. ராஜசூரியர், சி. குணரத்தினம், சபா சின்னத்தம்பி, சந்திரசேகரம் மற்றும் வடபிராந்திய ஐ தே. கட்சி கூட்டுமுன்னணி தலைவர் திரு. எஸ். திலகர், செயலாளர் திரு ஐ. மரியதாஸ் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர். (மா)

---

## மரக்கன்றுகள் நாட்டினர்

(மாவிட்டபுரம்)

பழை- வீமன்காமம் தலையிட்டி ஞானவைரவர் ஆலயத்தில் மரம் நாட்டும் வைபவம் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி ஆலய சுற்ருடலில் பயன் தருமரங்கள், நிழல் மரங்கள் ஆகியவற்றை நாட்டி இவ்வைபவத்தை தொழிலதிபர் திரு. க. கனகராஜா ஆரம்பித்துவைத்தரர்.

அவரால் வழங்கப்பட்ட பல்வேறு மரக்கன்றுகள் ஆலய வீதியில் நாட்டப் பட்டன. (அ)

---

## இடமாற்றம்

(மன்னுர்)

அரசியல் காரணங்களுக்காகத் திடீர் இடமாற்றம் செய்யப்பட்ட மன்னுர் திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ். தீவகலாலின் இடத்திற்கு மன்னுர் திட்டமிடல் அதிகாரியாகக் கடமையாற்றும் திரு. ரி. இராஜநாயகம் தற்காலிகமாக நியமிக்கப் பட்டுள்ளார்.

திடீர் இடமாற்றத்துக்குள்ளான திரு. எஸ். தீவகலால் கொழும்பு திட்டமிடல் அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார்.

---

## பகவான் பிறந்ததினவிழா

(புலோலி)

பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ணசாரதா சேவாச்சிரம 14வது ஆண்டு பொதுக் கூட்டமும் பகவான் சத்தியசாயி பாபா பிறந்த தினவிழாவும் இன்று சுவாமி சித்ரூபானந்தா தலைமையில் சேவாச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

மாலை பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா பற்றிய படக்காட்சியொன்றும் காண்பிக்கப் படும்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. ஈடு 4078 D. C. M.

1. சுப்பிரமணியம் கந்தையாவும்
2. பெண் மகேஸ்வரியும் மாவிட்டபுரம்.

வழக்காளிகள்

எதிராக
கதிரிப்பிள்ளை சுப்பிரமணியம்,
மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை.

எதிராளி

மல்லாகம் டிஸ்றிக் கோட்டில் M B 4078-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1982-ம் ஆண்டு மார்கழி மாதம் 8-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

ரூபா 17,050/- பின் 12-2-81 தொடக்கம் 3-9-81 வரைக்கும் ரூபா 10,000/-க்கு 18% வீத வட்டியும் பின் முழுத் தொகையும் இறுக்கும் வரைக்கும் 5% வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 3459 சதம் 71.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி மயிலிட்டி கோவிற்பற்று மயிலிட்டி இறை ''பேய்ப்புளியடி'' நி. ஒ (9 ஒன்பது குளி (11) பதினென்று இதற்கெல்லை கிழக்கு சிவநாதமுதலியார் பெண் இராஜேஸ்வரியின் ஆதனம், வடக்கு சண்முகரத்தினம் பெண் தெய்வநாயகின் ஆதனம், மேற்கு ரோட்டு, தெற்கு காசிநாதர் பெண் நன்னிப்பிள்ளையின் ஆதனம் இதடங்கலும் இதன் கிழக்கெல்லையிலுள்ள கிணற்றிலதற்குரிய பங்கும் அக்கிணற்றிற்கு படத்தில் 3-ம் துண்டாகக் காட்டப் பட்ட 4½ அடி அகல வழியும் வாய்க்காலும் பாவிப்புரித்தும் ஆனல் படத்தில் 4-ம் துண்டாகக் காட்டப்பட்டதும் இதன் தெற்கெல்லையோடு அமைந்ததுமான 3 அடி அகலப் பாதையில் கிழக்கெல்லைக் கணிக்காரரின் பாவிப்புரித்தும் புறநீங்கலாக.

சி. செ. மாரிமுத்து,
நீதிமன்றங்களின் விற்பனவு ஆணையாளரும் விலைமதிப்பாளரும்.

''விதானே வளவு'',
சித்தன்கேணி,
1-10-82.

(5245)

## ‘ஆசியாட்’ பந்தயங்கள்

# 17 பதக்கங்களுடன் ஜப்பான் முன்னணியில்!

## 12 பதக்கங்களுடன் சீனு இரண்டாமிடம்

புதுடில்லி: நவ 22

புதுடில்லியில் நடைபெற்று வரும் ஒன்பதாவது ஆசியவிளையாட்டுப்போட்டிகளின் மூன்ருவது நாளான நேற்றுவரை ஜப்பான் 8 தங்கப்பதக்கங்களையும், 6 வெள்ளிப்பதக்கங்களையும், 3 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று மொத்தம் 17 பதக்கங்களுடன் முன்னணியில் விளங்குகின்றது.

சீனு 3 தங்கப்பதக்கம், 4 வெள்ளி, 5 வெண்கலங்களுடன் மொத்தம் 12 பதக்கங்களைப்பெற்று இரண்டாவது இடத்தை வகிக்கின்றது.

‘ஜிம்னுஸ்டிக்’ என்றழைக்கப்படும் உடற்பயிற்சிப்போட்டியில் சீனு தங்கப்பதக்கத்தைப்பெற்றது.

எட்டாது ‘ஆசியாட்’ பந்தயங்களிலும் சீனு இப்போட்டியில் தங்கப்பதக்கத்தைச் சுவீகரித்ததென்பது குறிப்பிடத்தக்கது.

ஜப்பான் நீச்சல் போட்டிகளில் மட்டும் 5 தங்கப் பதக்கங்களைச் சுவீகரித்தது. சில புதிய ‘ஆசியாட்’ சாதனைகளையும் இப்போட்டியில் அது நிலைநாட்டியுள்ளதென்று தெரிவிக்கப்பட்டது.

உலக ஹாக்கிச் சாம்பியனுன பாகிஸ்தானிடம் சீன ஹாக்கிக் குழு, நேற்றைய ஆட்டமொன்றில் 6–0 என்ற ரீதியில் தோல்வியடைந்தது. சீனுவின் ஆட்டம் நன்ருக இருந்தபோதிலும் பாகிஸ்தானியரின் அபார விளையாட்டுக்கு அதனுல் ஈடு கொடுக்கமுடியவில்லை.




அம்பு எய்தல் போட்டியிலும் நான்கு புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன.

பிலிப்பைன்ஸ் 1 தங்கப்பதக்கத்தையும், தென்கொரியா 1 தங்கப் பதக்கத்தையும், ஒரு வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளன.

வடகொரியா ஒரு வெள்ளிப் பதக்கத்தையும், 1 வெண்கலப் பதக்கத்தையும்பெற்றுள்ளது.

இந்தோனேஷியா ஒரு வெண்கலப் பதக்கத்தையும், ஈரான் ஒரு வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளன.

நேற்றைய தினம் ‘இந்ர பிரஸ்தா’ உள்ளரங்கில் நடைபெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டிகளையும், வேறும் சில அரங்குகளில் நடைபெற்ற விளையாட்டுக்களையும் பிரதமர் திருமதி இந்திராகாந்தி, மகன் ராஜீவ், மருமகள் சோனியா, பேரப்பிள்ளைகள் ஆகியோர் சகிதம் சென்று பார்வையிட்டார். (கி)

## சோவியத் தலைமைப்பீடம்

# அமெ. உறவை விரும்புகிறது

மாஸ்கோ, நவ. 22

புதிய சோவியத் தலைமைப் பீடம் அமெரிக்காவுடன் சுமுக உறவுகளை வளர்த்துக்கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றது என்று சோவியத் பத்திரிகையான பிராவ்தா தெரிவித்துள்ளது.

பிராவ்தாவில்மேலும், அமெரிக்காவின் உபஜனுதிபதிஜோர்ஜ் புஷ் சோவியத்தில் புதிய அதிபர் திரு யூரி அந்ரபோவுடன் உரையாடியதையடுத்தே மேற்றிபிட்ட ஆர்வம் சோவியத் தலைமைப்பீடத்துக்கு ஏற்பட்டுள்ளதென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (கி)

# யாஸீர் அரபாத் எகிப்து விஜயம்?

## “சமாதானத் திட்டத்துடன் வரவேண்டும்” என்கிருர் முபாரக்

லண்டன், நவ 22

அரபு நாடுகளுக்கு மேற்கொள்ளும்சுற்றுப் பயணத்தின் போது, எகிப்துக்கும் பாலஸ்தீன இயக்கத்தலைவர் ஜனுப் யாஸீர் அரபாத் விஜயஞ் செய்வார் என்று தெரிவிக்கப்பட்டது ஆயினும் இதுபற்றித் தீர்க்கமாக முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லையென பாலஸ்தீன பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

கடந்த ஜூன் மாதம் லெபனுனினுள் இஸ்ரேலியப்படைகள் ஊடுருவி பின்னர் அங்கிருந்தும் பாலஸ்தீனப் போராட்டக்காரரை நாடுகடத்திய சம்பவங்களால் எகிப்திய, பாலஸ்தீன உறவு மிகவும் பாதிப்படைந்திருந்தது.

1979ம் ஆண்டு முன்னுள் எகிப்திய அதிபர் ஜனுப் அன்வர் சதாத்தும், இஸ்ரேலியப் பிரதமர் திரு மெனச்சம் பெகினும் அமெரிக்காவில் செய்து கொண்ட ‘காம்ப் டேவிட்’ உடன்படிக்கையை அடுத்து பி. எல். ஓ., எகிப்துடனுன தனது உறவைத் துண்டித்துக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

எகிப்திய அதிபர் ஜனுப் ஹொஸ்னி முபாரக், அரபாத்தின் கெய்ரோ விஜயம்பற்றிப் பிரஸ்தாபிக்கையில, ஜனுப்

(7–ம் பக்கம் பார்க்க)

# ‘வன்முறைகளும், திட்டமிட்ட குற்றச் செயல்களும் ஒழித்துக்கட்டப்பட வேண்டும்’

## - பரிசுத்த பாப்பரசர்

ரோம் நவ. 22

“வன்முறைகளும் திட்டமிட்டுச் செய்யப்படும் குற்றச் செயல்களும்முற்ருக ஒழித்துக் கட்டப்பட வேண்டும்.” என்று பரிசுத்த பாப்பரசர் இத்தாலியிலுள்ள சிசிலித் தீவிலுள்ள ‘பலேர்மோ’ நகரில் நடைபெற்ற பிரசங்கமொன்றில் குறிப்பிட்டார்.

பாப்பரசர் இவ்வாறு உரையாற்றுவதற்கு 24 மணித்தியாலயங்களுக்கு முன்னர் இத்தாலியின் பயங்கரவாத இயக்கமான ‘மாபியா’ வால் நால்வர் இந்நகரில் கொலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நால்வரில் 15வயதுச் சிறுவனெருவனும் அடங்குகின்ருன்.

பாப்பரசர் மேலும் தமது பிரசங்கத்தில் வன்முறைகளும் திட்டமிட்ட குற்றச் செயல்களும் மிருகத்தனமானவையென்று குறிப்பிட்டதுடன் இவற்றை தடைசெய்வதற்கான பிரசாரங்களில் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பேராசிரியர்களும் ஈடுபட வேண்டுமென்றுகேட்டுக் கொண்டார்.

பாப்பரசரின் வருகையை முன்னிட்டு பலத்தபாதுகாப்பு ஏற்பாடுகள் இந்நகரில் செய்யப்பட்டிருந்தன. வழமையாக தமது விஜயங்களின் போது பாவிக்கும் குண்டுகள் துளைக்க முடியாத வாகனத்திலேயே பாப்பரசர் இங்கு வந்திருந்தார்.

வன்முறைகள் குற்றச் செயல்களைக் கண்டித்த அதே வேளை போதை வஸ்துக்களினுல் ஏற்படும் அபாயங்கள் குறித்தும் பாப்பரசர் சவலை தெரிவித்தார். (கி)

## இந்திய முதுபெரும் ராஜதந்திரி

# கே.பி.எஸ். மேனன் காலமானுர்

திருவனந்தபுரம் நவ 22

இந்தியாவின் முதுபெரும் ராஜதந்திரியும், அரசியல்வாதியும், சிந்தனையாளருமான ஸ்ரீ. கே. பி. எஸ். மேனன் தமது 84 வயதில் நேற்று முன்தினம் காலமானுர்.

இந்திய வெளிநாட்டமைச்சராகவிருந்த ஸ்ரீ. மேனன் பல தடவைகள் சோவியத் யூனியன் உட்பட சில நாடுகளின் இந்தியத் தூதராகவும் பணியாற்றியுள்ளார்.

கேரள மாநிலத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர் முன்னுள் பிரதமர் ஜவஹர்லால்நேருவின் மதிப்புக்குரியவராகவும் விளங்கினுர்.

முன்னுள் இலங்கைப் பிரதமர் திரு. எஸ். டபி. யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுடன் இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட்’ பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பினையும் இவர் மேற்கொண்டார்.

இந்திய சிவில் சேவகரான ஸ்ரீ மேனன் பல விரிவுரைகளையும் முக்கிய பேச்சுக்களையும் தமது சேவைக்காலத்தில் ஆற்றியுள்ளார்.

இவர் ஒருமுறை ‘பரீட்சை என்பது ஒருவனுடைய அறியாமையை அளவிடுவதற்கேயல்லாமல் அவனுடைய அறிவை அளவிடுவதற்கு நடத்தப்படுவதல்ல” என்று உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ மேனனின் மறைவு குறித்து கேரளாவின் முதலமைச்சர் திரு. கருணுகரன் உட்பட பல பிரமுகர்கள் அனுதாபச் செய்திகளை அனுப்பியுள்ளார். (கி)

# உலகில் அமைதியை நிலைநாட்ட ஐ.நா. பாடுபட்டு வருகிறது”

(மட்டுவில்)

உலக வல்லரசுகளின் யுத்த கெடுபிடியை அணு ஆயுதப் பாவனையை அதன் மூலம் உருவாகும் அபாயத்தை அடியோடு நிறுத்தி உலகிலே பூரண சமாதானத்தை நிலை நிறுத்த முடியாது விட்டாலும் கூட அதை ஓரளவு தடுத்து இந்த உலகில் ஓரளவு அமைதி நிலைநாட்டிக் கொண்டிருப்பதென்ருல் அந்த மகத்துவம் முழுக்க முழுக்க ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தையே சாரும்.

சாவகச்சேரி கல்வி வட்டார உயர் வகுப்பு மாணவர்களின் ஐக்கிய நாடுகள் தின விழாவில் சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு கு. சோமசுந்தரம் மேற்கண்டவாறு கூறினுர்.

சாவகச்சேரி கல்வி மூல வளநிலை ஒரு மாதிரி ஐ. நா. சபையை நடத்தியது.

இதில் ‘லயன்ஸ்’ கழகமும் கலந்து கொண்டது.

சுமார் ஒன்பது பாடசாலைகள், சீனு, ரஷ்சியா, ஜோர்டான், அமெரிக்கா, பிரான்ஸ், இந்தியா அவுஸ்திரேலியா போன்ற பிரதிநிதிகளைப் போன்று உடைஅணிந்துஇதில் கலந்துகொண்டு தமது நாடுகளின் பிரச்னைகளை விளக்கினுர்கள்.

இலங்கை வங்கியின் பிரதேச முகாமையாளரும், சாவகச்சேரி பிரதேச சபை தலைவருமான திரு கே வி முத்துக்குமாரசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினுர்.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு சோமசுந்தரம் தமது தலைமை உரையில் தொடர்ந்து கூறுயதாவது:–

முதலாவது, இரண்டாவது மகாயுத்தங்கள் தோன்றின.

[7–ம் பக்கம் பார்க்க]

## தலைமன்னுர் தபால் ரயில் கொள்ளை:

# கட்டிவைக்கப்பட்ட ‘கார்ட்’

## தொடர்ந்தும் பொலிஸ் பாதுகாப்பில்!

(மன்னுர்)

தலைமன்னுர் தபால் ரயிலில் கடந்த வியாழக்கிழமை இரவு நடை பெற்ற கொள்ளைச்சம்பவத்தின்போது பிரதம கார்ட்டாக கடமையாற்றியபோது கொள்ளையர்களால் கட்டி வைக்கப்பட்டிருந்த திரு. கணேசநாதன் விசாரணைக்காக தொடர்ந்தும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் முருங்கன் பொலிஸ் நிலையத்திலேயே பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

கொள்ளைச் சம்பவதினம் திரு. பெனடிக்ற் என்பவரே பிரதம கார்ட்டாக கடமையாற்றவிருந்தார்.

இவர் அன்றைய் தினம் விடுமுறையில் சென்றதாலேயே திரு எஸ். கணேசநாதன் பிரதம கார்ட்டாக கடமையாற்றினுர்.

இதனையடுத்து கொள்ளைச் சம்பவ தினத்தன்று பிரதம கார்ட்டாக கடமையாற்ற வேண்டியவரும் விடுமுறையில் சென்றவருமான திரு. பெனடிக்ற் என்பவர் விசாரணைக்காக அழைக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்துடன் ேசாலை, மன்னுர், தலைமன்னுர் தபால் நிலைய அதிபர்களும் தொடர்ந்து விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் வவனியா பொலிஸ் அத்தியட்சகர் திரு. ஜெயசூரியா தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிருர்,

## பிரிட்டனில் குற்றச்செயல் அதிகரிப்பு:

# வேலையில்லாத் திண்டாட்டமே காரணம்!

லண்டன், நவ. 22

அண்மையில் பிரிட்டிஷ் அமைச்சர் ஒருவர் ரயிலில் பயணம் செய்கையில் அவரிடமிருந்த 100 பவுண்களும் திருடப்பட்டது தெரிந்தே;

தாம் அங்கம் வகிக்கும் அரசாங்கத்தின்கீழ் குற்றச்செயல் அதிகரித்து வருவதற்கும், அதனுல் பாதிக்கப்பட்டிருப்பதற்கும் அமைச்சர் ஒரு சாட்சியாகவுள்ளார்.

1981ம் ஆண்டில் பிரிட்டனின் குற்றச் செயல்களின் அதிகரிப்பு முன்னைய ஆண்டைக்காட்டிலும் 10 சதவீதமாக உள்ளது என்று புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

பிரிட்டனில் குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்குப் பிரதான காரணம் அங்கு அதிகரித்துள்ள வேலையில்லாத் திண்டாட்டமே என்று லாஜ் என்னும் டைம்ஸ் என்ற அமெரிக்கப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

இன்று பிரிட்டனில் 40 லட்சம் பேர் வேலையில்லாதுள்ளனர். இன்றைய அரசின் பொருளாதாரக் கொள்கையினுல் ஏற்பட்டுள்ள சீர்கேடுகளே. இதற்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

### மணிவாக்கு

ஜீவனெவனும் தான் அபாக்கிய வான் என்று கருதவேண்டாம்; பெருத காதலுக்கு ஒரு வானவில்லுண்டு.

— சேர் ஜேம்ஸ் பாரி

# நமது நோக்கு

## விளக்குப் பற்றிய விளக்கம்

இருபெரும் ஆங்கில அரசியல் பிரமுகர்கள் இங்கிலாந்தின் புகழ்பெற்ற பிரதமர் கிளாட்ஸ்டன் [Gladstone பற்றி பிரெஞ்சு பிரதமர் அமரர் க்ளெமென்ஷோவுடன் உரையாடினரென்பது பழைய கதை.

''அவர் போன்ற சான்ருேரைக் காண்டல் அரிது'' என்ருர் லோயிட் ஜோர்ஜ்.

உடனே அதை வெட்டிப் பேசிய மற்றவர் 'அவர் ஒருபெரும் ஏமாற்றுக்காரரும் கூட' என்று முடித்தாராம்.

முடிவுரை வழங்கிய பிரெஞ்சுப் பெருமகன் வாய்க்குள் சிரித்துக் கொண்டு 'ஏமாற்றுக் காரன்' என்ற பட்டம் பெருத பெரிய மனிதர்கள் எவரும் இல்லை'' என்று தீர்ப்பளித்தார்.

அரசியல் துறையை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் அல்லது சமூகத்தின் தலைவரென்ற உயர் நிலையை எட்டிப்பிடிக்கும் எவருக்கும் இந்தக் கருத்து பொருத்தமாயிருக்கும்.

சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடுகாட்டி அரசியல் பிரமுகர்களின் தில்லுமுல்லுகளை ஆராய்வது பெரும்பாலும் பயனற்ற செயலாகும். ஆதரிப்பதை ஆதரித்து எதிர்ப்பதை எதிர்க்கும் முறை விவேகமானது. இது பயனற்றதாய் இருந்தாலும் பரவாயில்லை.

சர்வஜன வாக்கெடுப்பில் தமிழர் கூட்டணி தீவிர எதிர்ப்பிரசாரம் நடத்த முடிவு செய்திருக்கிறது. தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்க மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் ஒருங்கு கூடிய கட்சி நாம் முன்னே குறிப்பிட்ட 'கிளாட்ஸ்டன்' கதையை நினைவூட்டுகிறது.

'இன்று தீவிர எதிர்ப்பிரசாரம்' என்று முடிவெடுத்த தலைமைப்பீடம் ஜனுதிபதி தேர்தலில் எவ்வாறு நடந்ததென்பதை நாமிங்கு குறிப்பிடுவது உசிதமல்ல என்பதே எமது உதாரணம் கற்பிக்கும் முடிவு.

போனது போகட்டும் இன்று தேவைப்படுவது சாதாரண பிரசாரம்; 'தீவிர' பிரசாரம் சந்தேகத்தைக் கிளப்புகின்றது எவரும் நினைத்தால் அது தவறென்று கொள்ளலாமா?

ஒரு தீவிரத்திலிருந்து இன்னெரு தீவிரத்துக்குச் சுழலுகின்ற வேகம் நாடகப் போக்கைக் குறிக்கும்.

உண்மையில் சர்வஜன வாக்கெடுப்பு அரசுக்கு சார்பாக முடிந்தால் இன்றைய பாராளுமன்ற அங்கத்தவர்கள் எவ்வித இடருமின்றி தொடர்ந்து ஆறுவருடங்கள் சபையில் இருக்கலாம். அதனை உதறித்தள்ளி எதிர்ப்பிரசாரத்தில இறங்குவது மிக நேர்மையான செயலாயிருப்பதுடன் நேர்மையாகத் தோன்றவும் வேண்டும்.

அடுத்த ஆகஸ்ட் 1983ல் கூட்டணி எம். பி.க்கள் தங்கள் பதவிகளை ராஜிஞமாச் செய்வது ஒருபெரும் சாதனையாகக் கணிக்கப்படாது. அறுபது வயதடையும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் தம்முடைய பதவியை ராஜிஞமாச் செய்வதாகச் சொல்வது பெரும பேசுவதாகும். ஓய்வுபெற வேண்டிய நிர்ப்பந்தம்; பென்ஷன் முதலிய நன்மைகள் எவையும் பாதிக்கப்படா. எனவே ராஜிஞமாவுக்கு ஏது இடம்?

சர்வஜன வாக்கெடுப்புப் பற்றி மக்களுக்கு எதிர்ப்பிரசாரம் செய்யமுயலும் தமிழர் கூட்டணி தனித்து நின்று அம்முயற்சியில் ஈடுபடுவதால் தமிழ்மக்களுக்கு இதனுல் என்ன விசேட பாதகமென்பதை விளக்குவார்களென்று நம்பலாம்.

இந்த விளக்கம் 'விளக்கை'ப்பற்றியது. விளக்கு என்ற சின்னத்துக்கு நேரே புள்ளடியென்றுல் இன்றைய அரசு இன்னும் ஆறு வருடங்களுக்கு ஆட்சி தொடரலாம் என்பது அர்த்தம். அதற்கு எதிராக பானைக்கு நேரே புள்ளடியென்ருல் அதனை மறுத்து பொதுத்தேர்தல் நடத்த வேண்டுமென்ற கோரிக்கையைக் குறிக்கிறது.

விளக்கு என்ருல் இன்றைய ஆட்சிக்குப் பச்சை விளக்குக்காட்டுதல் என்று மிகப்பொருத்தமாகக் கூறலாம்.

ஆனல் விளக்கின் நிறம் பசிசையானுலும்; அதன் குணம் எத்தகையது?

கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா?

'எல்லா விளக்கும் விளக்கல்ல' என்கிருர் தமிழ் முனிவர்.

தமிழ்த் தலைவர்கள் என்ன சொல்லப்போகிருர்கள்? தமிழ் முனிவரின் கூற்றை ஆதரித்து

''சான்ருேர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு'' என்று விளக்கமளிக்க முன்வருவார்களா?

அவ்வாறு எதிர்த்துப் பிரசாரம் செய்வதற்கு ''பொய்யாமை'' இன்றியமையாதது.

''அரசியலில் நூற்றுக்கு நூறு வீதம் பொய்யாமை எங்குண்டு?'' என்ற நியாயமான கேள்வியை எழுப்பலாம்.

ஜனுதிபதி தேர்தலில் பேசப்பட்ட பொதுத்தேர்தல் இன்று எங்கே போய் விட்டது?

அத்தேர்தலில் எமக்கு அக்கறையில்லையென்று தமிழர் விடுதலைக்கூட்டணி ஒதுங்கிய போது அவர்களின் மனேநிலை தவறென்பதை நிரூபிக்கும் செயல்கள் எதனைக்குறிக்கின்றன?

'ஜனுதிபதிஆட்சி' 'பாராளுமன்றத்துக்குக் கட்டுப்பட்ட ஜனுதிபதி ஆட்சி' என்ற இருவேறுபாடுகளை நாம் அடிக்கடி இங்கு பிரஸ்தாபித்தோம்.

மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனுதிபதி இன்று கேட்பது தமக்கு சார்பான பாராளுமன்றம் ஒன்றை; பொதுஜன வாக்கெடுப்பே அதனைப் பூர்த்தி செய்ய முடியும்.

அது நிறைவேறினுல் மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் வாய்ப்பு நிராகரிக்கப்படும். இந்தக் கருத்தைச் செவ்வனே விளக்கமுடியுமானுல் விளக்கைப்பற்றிய விளக்கம் சாதாரண மக்களுக்குத் தெளிவாகும்.

எல்லா விளக்கும் விளக்கல்லவென்பது தெளிவாக வேண்டும். உண்மை வழியில் நடப்பதற்கு இருளை நீக்கும் ஒளிவீசும் விளக்கே வேண்டப்படுவது.

இதனை விளக்கும் பொறுப்பு சான்ருேர்க்குரியது.

# மனித குலத்துக்கு சாந்தி வழங்கும் பகவான் சத்திய சாயிபாபா

தென் இந்தியாவின் ஆந்திர மாநிலத்திலுள்ள புட்டாபர்தியில் வாழும் அற்புத துறவி பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் 57வது பிறந்த தினம் இன்ருகும்.

இந்தியாவில் மிகவும் பின்தங்கிய எங்கோ ஓர் மூலையில் இருக்கும் குக் கிராமமான புட்டாபர்த்தி, இன்று சர்வ தேசத்தவரும் கூடி தாம்விரும்பும் தெய்வீக சுகத்தினைப் பெறும் மகா சந்நிதியாக மாறியுள்ளது. இந்த நிலைக்கு பகவான் ஸ்ரீ சத்திய சாயியின் மனித குலத்துக்கு சாந்தியும், பக்குவமும் வழங்கும் 57 வருட தெய்வீக சேவையே காரணமாகும்.

சிறுவயதிலே மிதமிஞ்சிய தெய்வீக சக்திகளினுல் தமது சுற்றத்தைக் கவர்ந்த பகவான் பாபா, இன்று உலகின் சகல பாகங்களிலிருப்பவர்களையும், தமது மனிதகுலத்தை உய்விக்கும் வழிகாட்டல்களினுல் கவர்ந்துள்ளார்.

சொர்க்கத்திற்குச் செல்லும் பாதை எப்படியிருக்குமென்பதனை நாம் உயிருடனிருக்கும் போதே அறிந்து கொள்ள வேண்டுமானுல் புட்டாபர்த்திக் கிராமத்திற்குச் செல்ல வேண்டுமென பலர் பேசிக்கொள்வதுண்டு.

புட்டாபர்த்தி செல்லும் அனுபவம் பற்றியும் அங்கு அனுபவிக்கும் தெய்வீக சுகம் பற்றியும், பத்திரிகையாளர்கள், பேராசிரியர்கள் உட்பட பகவானின் தன்மைகளை அறிந்தவர் எடுத்துக் கூறியுள்ளனர்.

பவான் ஸ்ரீ சத்திய சாயியின் தெய்வீக ஆதிக்கம் இன்று படிப்படியாக முழு உலகையும் கவர்ந்து வருகின்றது. மத போதனைகளையும், வழிபாட்டு நிகழ்ச்சிகளையும் கொண்டனவாக மட்டும் இவரது நடவடிக்கைகள் விளங்கவில்லை.

லட்சக்கணக்கான மாணவர்களுக்கு கல்வி புகட்டும் பல் பல்கலைக்கழகங்களும், பெரும் சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளக்கூடிய வைத்தியசாலைகளும் இவரினுல் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

''என்னை வணங்கும்படி நான் உங்களைக் கேட்கவில்லை. நீங்கள் வணங்குபவற்றை பூரண ஆத்மதிருப்தி ஏற்படும்படி வணங்குங்கள், எனது பெயரில் சேவைகளை வழங்காதீர்கள். உங்கள் மனதிற்கு திருப்தியளிக்கும் வகையில் அவற்றை வழங்குங்கள்'' என்று போதிக்கும் இந்த மகான் மானிட மந்தைகளை மேய்க்கும் ஒரு மேய்ப்பாளுக காட்சி தருகின்ருன்.

பொருளாதாரச் சிக்கல்களாலும், வாழ்க்கைப் பிரச்னைகளாலும், அல்லலுறுபவர்கள் மட்டும் இவரை நாடவில்லை. மோட்டார் கார்களின் இடைவிடாத ஓட்டங்களுக்கு மத்தியிலும், நிமிடத்துக்கு பல தடவைகள் விமானங்கள் ஏறி இறங்கும் விமானத்தளங்களுக்கு மத்தியில் வாழ்பவர்களும் இவரை நோக்கி இன்று படையெடுக்கின்றனர்,

''நாம் தேடித்திரிந்தவர் அகப்பட்டுவிட்டார்''' எமக்கு வேண்டியது கிடைத்துவிட்டது. ''புட்டாபர்த்தி ஒரு அற்புத பூமி'' என்று இவர்களில் பலர் தாம் பெற்ற பகவானின் தரிசனங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர்.

பகவத்கீதை. விவிலியம் ஆகியன உட்பட பெரும் மத இலக்கியங்களின் சாரங்களை உள்ளடக்கியதாக பகவான் பாபாவின் போதனைகள் அமைந்துள்ளன.

கடந்த ஆண்டு ஒரு பத்திரிகையாளர் பகவானைச் சந்தித்த அனுபவமொன்றை எழுதியிருந்தார்.

தாம் பகவானுடன் உரையாடிக் கொண்டிருந்தவேளை, அமெரிக்கப் பெண்ணெருவர் அருகில் இருந்தாராம். அப்பெண் பாபாவிடம் ''எனக்கு அமைதி வேண்டும்'' என்று கேட்டாராம், இதற்குப் பகவான் ''இதற்கு ஏன் நிறைய யோசிக்கின்ருய்''? இலகுவாக வாக அடையக் கூடியது என்று கூறி ''எனக்கு வேண்டும்''

[5-ம் பக்கம் பார்க்க]

# நாவல் இலக்கியத்தின் தனிச்சிகரம் தி. ஜ. ரா.

சுமார் 38 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நாவல் இலக்கியத்தின் புதுமைக்கும். செழுமைக்கும் அத்திவாரமிட்டு அற்புதமான நாவல்களைப் படைத்துத் தமிழ் இலக்கிய வாதிகள் இலக்கிய ரசிகர்கள் மத்தியில் மிகவும் மதிப்புக்குரியநாவலாசிரியராகத்திகழ்ந்தவர் தி. ஜானகிராமன். அவர் தனது அறுபத்திரண்டாவது வயதில் கடந்த வாரம் காலமானுர்.

தமிழ் நாவல் இலக்கியத்தின் தனிச் சிகரம் என்று கருதப்படும் நாவல் 'மோகமுள்' நாவலாகும். இதனைச் சுவைபடவும், சிந்தனையைத் தூண்டும் வகையிலும் எழுதியவர் தி. ஜானகிராமன். 1944ம் ஆண்டில் எழுதமுற்பட்ட ஜானகிராமன் இறக்கும்வரை தமிழ் இலக்கியஉலகிற்கு அளப்

### 'புத்தொளி'

பரிய சேவைசெய்துள்ளார். ஆரம்பத்தில் அவரது சிறுகதைகள் வாசகர்களைக் கவர்ந்தன. அமிர்தம் அவர் எழுதிய முதல் நாவலாகும்.

அவரது நாவல்களில் தஞ்சாவூர் மாவட்ட மண்வாசனை காணப்படும், மண்வாசனையை அழகுறச் சிறப்பாகக் கையாண்டு வாசகர்களைக் கவர்ந்தார். பல தரப்பட்ட மனித இயல்புகளை போலித்தனம் இல்லாது யதார்த்தமாக அவர் எழுதிய நாவல்கள் அதிகம்.

தஞ்சாவூர் மண்ணின் விசேடத் தன்மைகளை, குணவிசேடங்களை, பழக்கவழக்கங்களை, பேச்சு முறைகளைத் தனது படைப்புக்களில் நன்கு கையாண்டு வெற்றிபெற்றிருக்கிருர். எழுத்தாற்றல், கலைப்பண்பு, ரசஞானம், வாழ்க்கைப்போக்கு, நோக்கு அவரது நாவல்களுக்குத் தனித்தன்மைசேர்த்துள்ளன.

அவர் தனது தனது இலக்கிய முயற்சிகளுக்காகப்பாராட்டுப் பெற்ருர். சாகித்திய விருதைப் பெற்றுப் பெருமை கண்டார்.

அகில இந்திய வானெலியில் கடமையாற்றிய ஜானகிராமன் கல்விச் சேவைத் தயாரிப்பாளராகப் பத்தாண்டுகளுக்குமேல் சேவை செய்து 1981ம் ஆண்டு ஓய்வு பெற்ருர். அவரது திறமைக்கும் சொலுாக்கத்திற்கும், அறிவாற்றலுக்கும் மதிப்பளிக்க முன்வந்த வானெலியினர் அவரைக் கௌரவ தயாரிப்பாளராகக் கடமையாற்ற அனுமதித்தனர்.

சென்னை வானெலியிலும், டெலிவிஷனிலும் அவர் கடமையாற்றி அரிய பல நிகழ்ச்சிகளைத் தயாரித்தார்.

பல தடவைகள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்

(5ம் பக்கம் பார்க்க)

# கதிர்காமக் கந்தன் கோயில் அன்றும் இன்றும்

'கதிர்காமக் கந்தன்' கோவில் [அன்றும் இன்றும்] என்ற நூலை திரு. செ. சுந்தரலிங்கம் எழுதி வெளியிட்டிருக்கிருர்.

கதிர்காமக் கந்தன் கோவிலின் வரலாற்றைப் பற்றிய 12 கட்டுரைகளும் 11 மேற்கோள்களும் கொண்டதாக இந்நூல் விளங்குகின்றது.

''அடங்காத் தமிழர் முன்னணியின் தாபகராகவும், புகழ்ச்சி இகழ்ச்சிகளுக்குப்பாற்பட்டு தனக்குச் சரியெனக்கண்டதை நெஞ்சிலே வஞ்சமின்றி நேர்மைத் திறனேடு பேசியும் செய்தும் களம்பல கண்ட அரசியல் தலைவரான திரு. செ. சுந்தரலிங்கம் அவர்களே இந்நூலின் ஆசிரியராவார். இவர் தனது கொள்கையைத் திட்டமாக வலியுறுத்தும் தன்மையை இந் நூலில்பரக்கக் காணக்கூடியதாக உள்ளது.

கந்தனின் தோற்றம் சிறப்பு என்பனவைகளையும் கதிர்காமத்தின் தோற்றப் பெருமை என்பனவைகளையும் கதிர்காமம் தமிழ் மக்களுக்கு உரியது என்பதையும் ஆதாரங்களுடன் இந்நூலில் நிலைநாட்டியுள்ளார்

கதிர்காமத்தின் தொன்மையை பல ஆதாரங்களுடன் நிறுவும் ஆசிரியர் அனுராதபுரத்தில் மகாபோதி விருட்சத்தின் கன்றுநாட்டல் விழாவுக்கு கதிர்காமப் பிராமணேத்தமர்களும் பிரமுகர்களாக இருந்த செய்தியை மகாவம்சத்திலிருந்து சாட்சியாக எடுத்துக்காட்டியுள்ளார்.

1918-ம் ஆண்டு கதிர்காமக் கந்தன் வழிபாட்டில் அரசு தலையிட்டபோது சேர் பொன்னம்பலம் இராமநாதன் வன்மையாகக் கண்டித்துத் தடுத்த செய்தி 8-வது கட்டுரையில் குறிக்கப்பட்டுள்ளது. 9-வது கட்டுரையில் 1919-ம் ஆண்டு பிரிட்டிஷ் தேசாதிபதியான பிறவுன்றிக் கதிர்காமக் கோவிலையும் அதன் சொத்துக்களையும் அடாத்தாக கைப்பற்றிய சப்புருளை மாரிடமிருந்து மீட்டு பிராமணர்களிடம் கொடுத்த செய்தியும் 1818ம் ஆண்டு

[5ம் பக்கம் பார்க்க[

# ‘நாம் அமைக்கும் புதிய ஆட்சியில் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்காத கட்சிக்கும் இடமளிப்போம்’’ - ஜனாதிபதி

[கொழும்பு]

‘சர்வஜன வாக்கெடுப்பின் பின்னர் நா அமைக்கும் புதிய ஆட்சியில் தற்போது பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்காத கட்சிகளுக்கும் இடமளிப்போம். இதுகுறித்து நாம் எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளையும் நடத்துவோம்.

இவ்வாறு ஜனாதிபதி ஜே. ஆர் ஜயவர்த்தன கண்டியில் நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்புப் பிரசாரக்கூட்டமொன்றில் தெரிவித்தார். திரு. ஜயவர்த்தன மேலும் தமது உரையில் கூறியதாவது:

‘‘தற்போது பாராளுமன்றத்தில் 165 அங்கத்தவர்கள் இருக்கிறார்கள். சர்வஜன வாக்கெடுப்பின் பின்னர் இத்தொகையை நாம் 196 ஆக அதிகரிப்போம். அப்போது எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி அவற்றின் அங்கத்தவர்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்குவோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இப் பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் முடிவடைந்ததும் தமது பதவிகளை ராஜினமாச் செய்யப்போவதாகக்கூறியுள்ளார்கள், முடியுமானல் இப்போதே அவர்களை ராஜினமாக் செய்துவிட்டு தேர்தலில் நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன். சர்வஜன வாக்கெடுப்பின் பின்னர் நாம் அமைக்கவுள்ள புதிய ஆட்சி குறித்து தமிழ்க் காங்கிரஸ் கட்சியுடனும் பேச்சுவார்த்தை நடத்துவோம்.

‘‘அதிகாரவெறி பிடித்த அரசியல் சக்திகளிடமிருந்து மக்களைப் பாதுகாப்பதும், அபிவிருத்தியைத் தளர்வடையவிடாது தொடர்ந்து ஏற்படச் செய்வதுமே சர்வஜன வாக்கெடுப்பின்மூலம் நாம நீடிக்கவிருக்கும் ஆட்சிக்காலத்தின் நோக்கமாகும்’’ என்றார்.

[கி]

## ஒருவருக்குறிமாண்ட் இருவர்பிணையில்

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிர்சாலையில் ‘பைப்’ திருடியது தொடர்பாகக் கைதான சந்தேகநபர் இம்மாதம் 29ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டார்.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையிலிருந்து 10 அடி நீளமான ‘பைப்’ ஒன்றைத் திருடிச் செல்ல முயன்ற சமயம் பாதுகாவல் அதிகாரிகளால் பிடிக்கப்பட்ட நாகமணி தேவராஜா என்பவர் காங்கேசன்துறைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

இதுவரை மல்லாகம நீதிமன்றத்தில் ஆஜர் செய்த சமயம் இம்மாதம் 29ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி திரு. சீ வி. விக்னேஸ்வரன் உத்தரவிட்டார்.

சிமெந்து தொழிற்சாலை சிற்றுண்டிச்சாலையில் 25 பால்டின்களை திருடிச்செல்ல முயன்ற சமயம் கைதான எஸ். ஜெகதீஸ்வரன் என்பவரும், இதில் சம்பந்தப்பட்டவரெனச் சந்தேகிக்கப்பட்டுப் பொலிசில் சரண்புகுந்த எஸ். நாகராஜா என்பவரும விசாரணையின் பின் பொலிஸ்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவர்கள் மீது மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட உள்ளது.

## மனித குலத்துக்கு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

என்பவர்ளை றகைவிடு அமைதி உனக்குக் கிடைக்கும் என்றுராம்,

இவ்விளக்கம் ‘‘நான்’’ என்ற அடிப்படையில் தோன்றிய எனக்கு என்ற ஆணவத்தையும், வேண்டும் என்ற ஆசையையும் கைவிடும்படி போதிக்கும் இந்துமத போதனையை எத்துணை அழகாக அவ் அமெரிக்கப் பெண்ணுக்கு பகவான் கூறினர் என்பதைக் கண்டு தாம் மெய்சிலிர்த்ததாக அப்பத்திரிகையாளர் வியந்து எழுதியுள்ளார்.

அணு ஆயுதப் பீதியும், யுத்தமேகங்களும் கருக்கட்டத் தொடங்கியுள்ள இக்கால கட்டத்தில் ‘‘அதர்மம் எப்பொழுது தலை தூக்குகின்றதோ அப்பொழுது நான் அவதரிப்பேன்’’ என்று கீதையில் கூறிய பகவான் கிருஷ்ணனின் அவதாரமாகவே இவ்வற்புத புருஷர் இன்று விளங்குகின்றார்.

- அனந்த்

## கதிர்காமம்---

(4-ம் பக்கத் தொடர்ச்சி

இந்து சந்நியாசிகளிடம் கவனர் ஆலயப் பொறுப்புக்களைக் கொடுத்தமையும் அவர்களுக்கு இராணுவப் பாதுகாப்பு அளித்தமையும் ஆகிய குறிப்புக்களும், 11வது மேற்கோள் 1946–1952–1970–1972 முதலிய ஆண்டுகளில் கதிர்காம ஆலயத்தில் பௌத்த தலையீடுகள்எவ்வாறு இருந்தன என்பதை நான்கு படம்பிடித்துக்காட்டுகின்றது

இந்நூல் மட்டுமன்றி இது போன்ற நூல்கள் பல வருவதனாலேயே கதிர்காமத்துக்கும் தமிழ் மக்களுக்கு உள்ள தொடர்பு பாதுகாக்கப்படுவது என்பது மட்டுமன்றி கதிர்காமக் கோவிலின் பெருமை இக்காலச் சந்ததிக்குப் புலனாகும்.

12 ரூபா என விலை குறிக்கப்பட்டுள்ள இந்நூல் ஆங்கிலத்தில் எழுதப்பெற்று திரு பி சுப்பிரமணியம் செட்டியாரால் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் இந்துக்கோயில்கள் பற்றி குறிப்பாக கதிர்காமக் கந்தன்பற்றி ஆராயவிரும்புகிறவர்களுக்கு இது ஒரு அரிய ஆதார நூலாக அமையலாம்.

[ப]

## நாவல்---

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட ஜானகி ராமன் ‘‘நடந்தாய் வாழி காவேரி’, என்ற பயண நூல் மூலம் இலக்கிய உள்ளங்களை மகிழ்வித்தார்.

மரப்பசு, உயிர்த்தேன், செம்பருத்தி முதலிய நல்ல நாவல்களைப் படைத்திருக்கிறார். அவரது சிறுகதை, நெடுங்கதைத் தொகுப்புகள் பலவும் வெளிவந்தன, நாலுவேலி நிலம், வடிவேல் வாத்தியார் போன்ற மேடை நாடகங்கள் மக்களிடையே புகழ் பெற்றன.

யதார்த்த எழுத்தாளரான திரு. ஜானகிராமன் இலக்கிய உள்ளங்களில் என்றும் இருப்பார்.

## யாழ். டிக்கட் மூன்றும் பரிசு பெற்றது

(யாழ்ப்பாணம்)

தேசிய லொத்தர் சபையின் சீட்டிழுப்பில் மூன்றுவது பரிசு யாழ்ப்பாணத்தில் விற்பனையான டிக்கட்டுக்கு கிடைத்துள்ளது. கடைசியாக 18ம் திகதி இழுக்கப்பட்ட தேசிய லொத்தர்சபையின் சீட்டிழுப்பில் மூன்றுவது பரிசு பத்தாயிரம் ரூபா பெற்ற 11F0389 டிக்கட் யாழ் ஐக்கிய வியாபார சங்கத்தினல் விற்பனை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய கடல் அட்டை இனம்

(மன்னார்)

மன்னார் கடல் பிரதேசத்தில் இதுவரை காலமும் காணப்படாததும், வெளிநாட்டு கடல் பிரதேசத்தில் காணப் படுவதுமான கடல் அட்டை இனம் ஒன்று மன்னார் சௌத்பார் ஆழ் கடலில் கண்டெடுக்கப் பட்டது.

கறுப்பு நிறமான இக்கடல் அட்டைக்கு விசேடமாக பற்கள் இருக்கின்றன.

இக்கடலட்டையை பதம் பண்ணிப் பார்க்கும் பரிசீலனை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


# பாரிய கட்டடம் கட்டுபவர்களே! சற்று கவனியுங்கள்




நீங்கள் அமைப்பது பாரிய கட்டிடங்களா? அப்படியாயின் அதற் கேற்ற பாரிய பெயின்ற் தேவையன்றே! இதோ இருக்கவே இருக்கிறது இங்கிலாந்தின் அதிபெரிய பெயின்ற் விநியோகத்தர்களான பிளன்டெல் - பேர்மோகிளேஸ் தாபனத்தின் தயாரிப்புகள்.

பிளன்டெல் - பேர்மோகிளேஸ், தொழிலியல் கட்டிட அமைப்பாளர்களுக்குக் கச்சிதமான விலைகளில் வருகின்றது.

பிளன்டெல்-பேர்மோகிளேஸ் பாவிப்பதனல் உங்கள் சிரமம், நேரம், செலவு யாவும் குறைகின்றன.

கட்டிடக் கலையில் உங்கள் கைவண்ணத்துக்கு முத்தாய்ப்பு அளிக்கிறது பிளன்டெல் - பேர்மோகிளேஸ்.

பமாஸ்டிக் இமல்சன் (வெள்ளையும் நிறங்களும்)
4 லீற்றர் ரூபா. 168/-
1 லீற்றர் ரூபா. 46/-
பேர்மோகிளேஸ் குளொஸ் இனமல் (வெள்ளையும் நிறங்களும்)
4 லீற்றர் ரூபா. 205/-
1 லீற்றர் ரூபா. 56/-
500 மி.லீற்றர் ரூபா. 29/-

உற்பத்தியாளர்களும் சந்தைப்படுத்துவோரும்
டெல்மேஜ் போர்சைத் அன்ட் கம்பனி (பெயின்ற்ஸ்) லிமிட்டெட்.
101, வினயாலங்கார மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி. 93367, 93361 - 5.

பிளன்டெல் பேர்மோகிளேஸ்
நிபுணர்களின் உறுதுணை

# "மரணபயம் ஒழிந்துவிட்டால் இன்பஒளி உண்டாகும்"

[நாவலப்பிட்டி]

நமது சமயத்தில் பலவகையான வழிபாடுகள் இருப்பதற்குக் காரணம் பலதரப் பட்டமக்களும இறைவன் தருவருளுக்குப் பாத்திரமாக வேண்டுமென்ற கருணைநோக்கந்தான். ஒவ்வொரு மனிதருக்குமுள மனப்பக்குவத்தை உணர்ந்து அதற்கு ஏற்றபடி எப்படி எப்படி உபதேசம் செய்யவேண்டுமோ அப்படிச் செய்தார்கள் நம் நாட்டுப் பெரியோர்கள். வாழ் நாளில் வருகின்ற துன்பங்கள் எல்லாவற்றிலும் மிகப்பெரிய துன்பம் சாவு. துன்பம் தருகின்ற இருட்டாகிய சாவை ஒழித்து விட்டால் இன்ப ஒளி உண்டாகும். இறைவன் திருஉருவத்தை மனதில் பதித்துக் கொள்வதன்பயன் இதுதான்''

இவ்வாறு ஆத்மஜோதி ஆசிரியர் திரு நா. முத்தையா நாவலப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவிலில் நடைபெற்ற கந்தசஷ்டிப் பெருவிழாவில் பேருரை நிகழ்த்துகையில் கூறினர்.

பெருந்தொகையான மக்கள் தினமும் விரதம் அனுஷ்டித்து கந்தபுராணபடனமும கந்த சஷ்டிச் சொற்பொழிவுகளையும் கேட்டுவருகின்றனர்.

திரு. நா. முத்தையா தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

இந்த ஆறுநாட்களும் மனத்தால் முருகதியானம செய்து வாக்கால் முருக மந்திரத்தை ஓதி உடலால்முருகன் திருக்கோயிலை வலம்வந்து வணங்க வேண்டும். இதற்காகத்தான் கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிக்கின்றோம். கந்தன் என்ற சொல்லுக்கு ஒன்றுபட்டவன் என்பதுபொருள். ஒன்றுபட்டவனுல்தான் மக்களை ஒன்று படுத்தமுடியும்.

'ஓங்காரம் ஒருமந்திரம். அது ஒலிவடிவானது. ஓங்காரத்திற்கு ஒளியும் உண்டு ஓங்காரம் அனுபவ நிலையில் ஒலியாகவும் ஒளியாகவும் இருந்து பொறிகள் பாராமுகப்படாமல் ஒடுங்கி நிற்க உதவிசெய்யும் என்ற இரகசியத்தை 'ஓம்காரத்துள்ளொளிக்குள்ளே முருகன் உருவம்கண்டு தூங்க வேண்டும்'' என்று சொல்லுகின்றார் கலியுகத்தில் கண் கண்ட தெய்வமாக விளங்கும் முருகப்பெருமானுடைய திருவருளைப்பெற்று நாம் உய்வதற்கு இந்தக் கந்தசஷ்டி விரத காலமே மிகவாய்ப்பானது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


## வாழ்க்கை முழுவதும் ஆயிரம் தொல்லைகள்.



எனவேதான் எனது குடும்பத்திற்கு மேலதிக சக்தி வழங்கும் நெஸ்டோமோல்ட் கொடுக்கிறேன்.



இன்றைய வாழ்முறை வேகத்திற்கேற்ப முழுநாளும் தேவைப்படும் சக்திச் சமனிலையை எனது குடும்பத்திற்கு வழங்க வேண்டியது தாய் என்ற முறையில் எனது கடனுகிறது. இல்லையேல் என் குடும்ப சுகாதாரம் சீர்குலைந்து விடும் என்பதை நான் நன்கு அறிவேன்.

எனவே தான் எனது குடும்பத்திற்கு வேண்டிய மேலதிக சக்திக்கு நெஸ்டோமோல்ட் வழங்குவதென்று நிச்சயப்படுத்தியுள்ளேன்.

முழுச் செழுமை மிக்க நெஸ்டோமோல்ட், முழு ஆடைப்பால், விட்டமின் B, மோல்டட் பார்லி சாரம் கொண்ட தூய ஆரோக்கிய உணவு.

என்குடும்பம் எப்பொழுதும் ஆரோக்கியத்துடனும், சுறுசுறுப்போடும் திகழ்வதால்,

நெஸ்டோமோல்ட் டிற்கு எனது நன்றி.

450 கிராம்: ரூ. 43 90




Nestlé

நெஸ்டோமோல்ட்
உங்கள் வாழ்க்கையைக் கொண்டு
செலுத்த உகந்த பானம்

HTL CN 1141

# வீட்டுக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கத் தடை

(மாவிட்டபுரம்)

வீடொன்றினுள் அத்துமீறிப் பிரவேசித்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் அவ்வாறு அத்துமீறிப் பிரவேசிக்கக்கூடாதென தடைவிதித்து மல்லாகம் ஆரம்ப நீதிமன்ற நீதிபதி தீர்ப்பு வழங்கியுள்ளார்.

தெல்லிப்பழையைச் சேர்ந்த ரி. முருகேசு என்பவரது வீட்டினுள் 82 மார்ச் 31ல் அத்துமீறிப்பிரவேசித்து அமைதிக்குப் பங்கம் விளைவித்ததாக எம். தவராஜா, எஸ். காசிராஜன். எம். சிவலிங்கம், தவமணி, கதிர்காமநாதன் ஆகியோர் மீது சுன்னாகம் பொலிசார் குற்றஞ்சாட்டியிருந்த வழக்கு மல்லாகம் ஆரம்ப நீதிமன்றத்தில் நீதிபதி திரு. கே. கணபதிப்பிள்ளை முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப்பட்டது.

மேற்படி வீட்டை ஒப்பந்த அடிப்படையில் கட்டிக்கொடுத்த கட்டிட ஒப்பந்தக்காரர் வி. இரத்தினம் மற்றும் அ. நடராஜா, கட்டிட அமைப்பாளர் ஐ. அரியரத்தினம் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

வீட்டுக்காரர் சார்பில் சட்டத்தரணி செல்வி மாலினி இராஜரத்தினத்துடன் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் மேற்படி வீட்டை அமைக்க 2லட்சத்து 99 ஆயிரத்து 810 ரூபா99சதம் செலவாகியுள்ளதெனவும், அதில் ஒருபகுதியை இங்கிலாந்திலுள்ள மேற்படி வீட்டுக்காரர் ரி. முருகேசுவின் மகன் தர்மராஜா அனுப்பியிருந்தாரெனவும், மிகுதியை திரு. முருகேசு வழங்கியிருந்தாரெனவும் குறிப்பிட்டு இவ்வீடு முருகேசுவின் பொறுப்பிலேயே இருக்க வேண்டுமென வாதிட்டார்.

விசாரணை முடிவில் மேற்படி வீடு முருகேசுவின் பொறுப்பிலேயே இருக்கவேண்டுமென உத்தரவிட்டு இங்கு எவரும் அத்துமீறிப் பிரவேசிக்கக்கூடாதெனவும் தடை உத்தரவு பிறப்பித்தார். (க)

# கட்டிலுக்கடியில் பதுங்கியிருந்தவர் பிடிக்கப்பட்டுப் பொலிஸில்

(மாவிட்டபுரம்)

வீடொன்றினுள் புகுந்து பதுங்கியிருந்தவர் பொதுமக்களால் பிடித்துக் கட்டிவைக்கப்பட்டபின் காங்கேசன்துறைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டார்.

இளவாலையைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை கனகசுந்தரம் என்பவரது வீட்டினுள் புகுந்தநபர் ஒருவர் வீட்டினுள்ளிருந்த கட்டிலுக்கடியில் ஒளிந்திருந்தாராம்.

மேற்படி வீட்டுக்காரரின் மனைவி குளித்துவிட்டு அறைக்குள் சென்ற சமயம் இவர் பதுங்கியிருக்கக் கண்டுவிட்டு அறையைப் பூட்டிவிட்டு கூக்குரல் எழுப்பினுராம்.

கூக்குரல்கேட்டு அங்குகூடிய பொதுமக்கள் இந்நபரைக் கட்டிவைத்தபின் காங்கேசன் கேசன்துறைப் பொலிசில் ஒப்படைத்தனர்.

முள்ளானையைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் இளங்கோ என்னும் இந்நபரை காங்கேசன்துறைப் பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

நீதிபதி சி. வி. விக்னேஸ்வரன் அவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

இந்நபர் மேற்படி வீட்டினுள் புகுந்து பதுங்கியிருந்ததன் மர்மம் என்னவென்பதை அறிய காங்கேசன்துறைப் பொலிசார்விசாரணையில்இறங்கியுள்ளனர். (அ)

# "ஆயுர்வேத வைத்தியம் பிரபல்யமடைந்துள்ளது"

[வேலணை]

ஆயுர்வேத வைத்தியம் நூற்றுக்கு எழுபது வீதம் இலங்கையிலே மிகவும் பிரபல்யம்வாய்ந்ததாக இருக்கின்றது.

யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலை அதிபர் சி. எஸ். நச்சினார்க்கினியன் யாழ்ப்பாண மாநகர மண்டபத்தில் நடைபெற்ற ஆயுர்வேத வைத்தியர்களுக்கிடையிலான கருத்தரங்கில் தெரிவித்தார்.

சர்வதேச சனத்தொகை சங்கத்தின் அதிபர் திரு. டெரி லூயிஸ் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அவர் மேலும் கூறியதாவது:- குடும்பத்திட்ட செய்திகளையும், ஆயுர்வேத வைத்தியர் கிராம, பட்டின, நகரப்புற மக்களுக்கு கொண்டு சென்று விளக்க வேண்டும். குடும்பத் திட்ட சேவை இந்த நாட்டில் நடைபெறுகின்றபோது அவர்கள் எதிர்பார்க்கும் அளவிற்குக் குறைவாகவே நடைபெறுகின்றது ஆனாலும் இக்கருத்தரங்கைப் பொறுத்த அளவில் ஆயுர்வேத வைத்தியர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கிய சர்வதேச சனத்தொகை சேவைச் சங்கத்தின் அதிபர் திரு. டெரி லூயிஸ் பேசுகையில் கூறியதாவது:- இதுவரை நடாத்தப்பட்ட கருத்தரங்குகளில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடத்தப்பட்ட கருத்தரங்குகள் அமோகவெற்றியளித்திருக்கின்றன இதற்குக் காரணம் சர்வதேச சனத்தொகை சேவை சங்கத்தில் கடமையாற்றும் வைத்திய கலாநிதிகள் திரு ஆ இராமநாதன், ந ஜீவா ஆகியோரின் கடின உழைப்பேயாகும் எதிர்காலத்தில் ஆயுர்வேத வைத்தியர்களுக்கு உயர் சத்திர சிகிச்சை முறைகளும், மற்றும் தேவையான உயர் கருத்தடை முறைகளாகிய ''லிப்பே'' வளையம் பொருத்துதல் போன்றவைகள் பற்றி அடுத்தடுத்த கருத்தரங்குகளில் போதிக்கப்படவிருக்கின்றன. அத்தோடு குடும்பத்திட்டம் பொதுவாக பெண்களுக்கு மிகவும் அவசியம் எனவும் அதைப் பூர்த்தி செய்ய இங்கு மூன்றில் இரண்டு பகுதி பெண்கள் சமுகமளித்திருப்பதை என்னல் கவனிக்கக் கூடியதாகவுள்ளது.

இக்கருத்தரங்கில் சர்வதேச சனத்தொகை சேவை சங்கத்தில் கடமைபுரியும் திரு. போரிட்டி மெதகொட, மேர்வின்களுவித்தாரன, எப். பி எப். சலோ ஆகியோர்களும் கலந்து கொண்டனர். [க]

# இன்றைய பலன்

கார்த்திகை மாதம் 7ம் திகதி
செவ்வாய்க்கிழமை
23—11—82)

மேடம்: பேராசையின்மூலம் குறுக்குவழியை நாடுவீர்கள் இதனுல் விபரீதங்கள் தோன்றக்கூடும் மறைமுகமான எதிர்ப்புக்களும் தோன்றும் முன் எச்சரிக்கை நன்று.

இடபம்: கனிவான நினைவலைகளில் இன்று ஆனந்தமாக மிதந்து செல்வீர்கள் கல்வித்துறையில் வித்துவத்தன்மை தென்படும் வாகனம் செலுத்துபவர்கள் மக்களின் ஆதரவைப் பெறுவர்.

மிதுனம்: வசதிகள் பெருகும். வாழ்க்கையும் வளம் நிறைந்ததாகக் காணப்படும். தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும் இன்று சுபநாள்.

கடகம்: முன்னேற்றம் தடைப்பட சூழ்ச்சிகள் உருவாகும். உள்வீட்டிலேயே பூசல்கள் அதிகரிக்கும் சிலருக்கு உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

சிங்கம்: உள்ளத்தில் உவகைக்கூத்து. உறவினர்கள் வருகையால் வாழ்க்கை உற்சாகம் திரம்பியதாக இருக்கும் மனதில் புதிய எண்ணங்கள் தலைதூக்கும் எதிலும் தூய்மையைக்காண விரும்புவீர்கள்.

கன்னி: விஷப்பரீட்சையின் மூலம் விபரீதங்கள் நிகழலாம். மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்கநேரிடும் இன்று சும்மா இருப்பதே சுகம்.

துலாம்: பொருளீட்டுவதில் புதிய வழிகளைக் கையாளுவீர்கள் எதையும் சிறப்பாகச் சாதிப்பதில் முதலிடத்தைப் பெறுவீர்கள். மக்களாலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு, சிலருக்கு உத்தியோக உயர்வு உண்டு

விருட்சிகம்: எதிர்காலம் பிரகாசமடைய இன்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் தொழில்துறையில் மனதுக்கு ஏற்றவண்ணம் மாற்றங்கள் இடம்பெறும். முன்னுள்மேலதிகாரியொருவர் உங்கள் வெற்றிக்குத் துணைநிற்பர்.

தனு: வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பலவழிகளிலும் முயற்சிசெய்வீர்கள். புதிய தொழில்துறையொன்றில் வாய்ப்புக்கிடைக்கும் முன்னேற்றத்திற்கு இடமுண்டு.

மகரம்: சிந்தனைச் சிலந்தி வலைபின்னும் தனிமையைப் பெரிதும் விரும்புவீர்கள் கடமையில் தளர்ச்சிகாணப்படும். நிம்மதியற்றதினம் பிறர் நம்பிக்கை கைகூடலாம்.

கும்பம்: இனபந்துக்கள் மத்தியில் பூசல்கள் தோன்றும் மனக்குமைச்சல்களினுல் வேதனைப்படுவீர்கள் சிறிய விபத்திற்கும் இடமுண்டு. பிள்ளையொன்றின் உடல்நலம் கவலையைத்தரும் தெய்வநம்பிக்கை வேண்டும்.

மீனம்: சமயோசிதமான நடவடிக்கையின் மூலம் எதையும் சமாளித்துக்கொள்வீர்கள் இல்லறத்தில் அமைதி நிலவும் பூமியால் இலாபமுண்டு, பேச்சுவார்த்தைகள் இன்று அதிக பயனை அளிக்கும்

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# 'ஆசியாட்டில்' இலங்கை நடனக்குழு

(கொழும்பு)

புதுடில்லியில் நடைபெற்று வரும் ஒன்பதாவது ஆசியவிளையாட்டுப் போட்டிகளில் இலங்கையின் நாட்டியக்குழு வொன்றும் நடன நிகழ்ச்சிஒன்றை வழங்கவுள்ளது.

இந்த நடனக்குழுவினர் 'ஆசியாட்' போட்டிகளை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கலைநிகழ்ச்சியியொன்றிலேயே கலந்துகொள்கின்றனக.

இலங்கையின் பாரம்பரிய நடனங்களான, கண்டிய நடனம், முகமூடிநடனம், அருவிவெட்டும் நடனம் ஆகியன இலங்கைகுழுவின் நிகழ்ச்சியில் இடம்பெறும. [கி]

## யாஸீர் அரபாத்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அரபாத் கெய்ரோ வருவதானுல் அமெரிக்காவுக்கு எகிப்து மூலமாக தெரிவிக்கக்கூடிய மத்திய கிழக்கு சமாதானத் திட்டமொன்றையும் அவர் தம்மிடம் சமர்ப்பிக்கவேண்டுமென்ருர். (கி)

# சண்டிலிப்பாய் வெற்றி

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் விளையாட்டுக்கழகத்திற்கும் உடுவில் விளையாட்டுக் கழகத்திற்கும் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் விளையாட்டுக் கழகம் 5-1 கோல் வித்தியாசத்தில்உடுவில் விளையாட்டுக் கழகத்தை வென்றது. இப்போட்டி மெமோறியல் கல்லூரிமைதானத்தில் நடைபெற்றது நடுவராக ச. கணேஷ் கடைமையாற்றினுர்.

# கைத்தொழில் ஊக்குவிப்புக்கு நிதிஉதவி

மாவிட்டபுரம்]

வலி. தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள தாவடி கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு 'உலக தரிசன நிறுவனம்' 9000 ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது.

யுவதிகளைக் கைத்தொழில் துறைகளில் ஊக்குவிக்குமுகமாக வழங்கப்பட்ட இந்த நன்கொடையை மேற்படி கிராம அபிவிருத்திச் சங்கம் தாவடி மாதர் சங்கத்திற்கு வழங்கி தையல், கோழி வளர்ப்பு ஆகியவற்றுக்காகப் பயன்படுத்தியுள்ளது.

இப்பணத்தில் தையல் மெஷின் ஒன்று கொள்வளவு செய்யப்பட்டுள்ளதுடன், மிகுதியில் 20 இளம் பெண்களுக்குத் தலா 250 ரூபா வீதம் கோழி வளர்ப்புக்காக வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி தையல் மெஷினையும், கோழி வளர்ப்புக்கான நிதியுதவியையும் வலி. தெற்கு கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. கே. கந்தையா, உதவி கிராம அபிவிருத்தி அதிகாரி திரு ரி ஞானசேகரவேல் ஆகியோர் மேற்படி மாதர் சங்கத் தலைவியிடம் கையளித்தனர்.

தாவடி கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர்.

## உலகின்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இதில் இரண்டாவது மகாயுத்தத்தின் போது பயங்கர அணுகுண்டை பயன்படுத்தப்பட்டது.

1945ம் ஆண்டில் ஏர்ப்பட்ட இப்பயங்கர கெடுபிடியிலிருந்து உலகை ஓரளவு காப்பாற்றி அமைதியை நிலைநாட்டிய பெருமை ஐ நா சபைக்கே உரியது இதில் 150 நாடுகள் ஒன்றுபட்டு இச்சபையை இயக்கி வருகின்றன.

1945ல் அணுகுண்டை கண்டுபிடித்த அந்த ஜப்பானிய விஞ்ஞானி சற்றில் தான் உலகிற்கு இழைத்த துரோகத்தை நினைத்து, துறவியாகி, பகவத்கீதையைப் படித்துத் தான் வாழ்நாளைக் கழித்ததாகக் கூறப்படுகிறது.

இப்படி உலக நலனைப் பாதுகாக்கும் இந்த நிறுவனத்தை நாம் வாழ் நாள் பூராக வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளோம்.

சட்டத்தரணி திரு செ. அம்பிகைபாலனும் உரையாற்றினர். (க)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
DRAGULA
Action – Horror

ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் – சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

23-11-82 வரை
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 4-45, 7-30, 9-15
Air port 80

மனோகரா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
அழகே உன்னை
ஆராதிக்கிறேன்
(வயதுவந்தவர்க்கு)

றீகல் [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன்–ஜெயலலிதா
அசோகன்–நாகேஷ்
நான் (ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம், ஜி.ஆர்.
நவரத்தினம்
வண்ணப்படம்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி–ஜெயலலிதா
சவாலேசமாளி

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 4-30, 7-00, 9-30 சனி, ஞாயிறு 2-00
THE ARENA
25—29-11-82 1941 (War Film)

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி-உஷா நந்தினி நடித்த
என்னைப்போல் ஒருவன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
Rise and Fall of IDI AMIN
இடி அமினின் எழுச்சியும் வீழ்ச்சியும்

யாழ். மாவட்ட அபிவிருத்தி :

# 'பிரதேச அபி. அமைச்சு 1,80,25,000 ரூபா ஒதுக்கீடு'

## அமைச்சின் பிரதிப்பணிப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

"யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகளுடன், இந்து சமய – இந்து கலாசார – பொருளாதார – தமிழ்மொழி அமுலாக்கல் – சமூக அபிவிருத்திக்கு இந்த யாழ் மாவட்ட பிரதேச அபிவிருத்தி அலுவலகம் தொடர்ந்து செயலாற்றும்."

யாழ். மாவட்ட பிரதேச அபிவிருத்திஅமைச்சின் பிரதிப் பணிப்பாளரும், யாழ். மாவட்ட மந்திரியின் இணைப்புச் செயலாளரும், யாழ் செயலக உதவி அரசாங்க அதிபருமான திரு. எஸ். பி. பாலசிங்கம், பிரதேச அபிவிருத்திச் செயலகத் திறப்பு விழாவில் வரவேற்புரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

பிரதேச அபிவிருத்திஅமைச்சின் செயலாளர் திரு எம். இராமலிங்கம் தேசியக் கொடியைஏற்றிவைத்து, இந்த அலுவலகத்தைத்திறந்துவைத்தார் யாழ். அரசாங்க அதிபரும், யாழ் மாவட்டச் செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா யாழ். மாவட்ட நந்திக் கொடியை ஏற்றி வைத்தார்.

இத்திறப்பு விழாவில் யாழ் செயலக அதிகாரிகளுட்படப் பலர் கலந்து கொண்டனர்.

திரு பாலசிங்கம்தொடர்ந்து பேசுகையில், "யாழ் மாவட்ட பிரதேச அபிவிருத்திக்கு மட்டுமல்ல, வடக்கு–கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல பிரதேசங்களிலும் இந்து சமய கலாசாரத்தை விரிவுபடுத்தவும், தமிழ் மொழியை அமுலாக்கவும், இவற்றுக்குப் பொறுப்பான அமைச்சரான திரு. சி. இராசதுரை நடவடிக்கை எடுத்துவருவதையும் அவர் பாராட்டினார்.

"யாழ். மாவட்ட பிரதேசத்தில் முழுங்காவில் படித்த வாலிபர் திட்டத்தின் முதலாம் பகுதிக்கு 56 லட்சம் ரூபாவும், கால்நடை உணவு தயாரிக்கும் திட்டத்துக்கு 32 லட்சம் ரூபாவும், காரைநகர் வடக்கு மின்சார வேலைகளுக்கு 3 லட்சம் ரூபாவும், பருத்தித்துறை திக்கம் மின்சார வேலைகளுக்கு 4 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவும், யாழ். ஆஸ்பத்திரி அதிதீவிர சிகிச்சை நிலையம் அமைக்க 9 லட்சத்து 45 ஆயிரம் ரூபாவும், மகதேவா தாம்போதிக்கு 5 லட்சம் ரூபாவும், நாவலர் ஞாபகார்த்த மணிமண்டபத்துக்கு 30 லட்சம் ரூபாவும், பனம்பொருள் அபிவிருத்திக்கு 40 லட்சம் ரூபாவும் ஆக மொத்தம் 1,80,25,000 ரூபாவை அமைச்சு ஒதுக்கியுள்ளது என்றும் திரு. பாலசிங்கம் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா, யாழ். மாவட்ட மந்திரி திரு யு பி விஜயக்கோன் ஆகியோரி அனுப்பிவைத்துள்ள ஆசிச் செய்திகளையும் அவர் வாசித்தார். [மா]

## இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாணம் – கொழும்பு தொலைபேசிச் சேவையில், முன்னர் ஒரு சரித்திரமே தங்கியிருந்தது!

என்றும், எப்பொழுதும், எந்நேரமும் எட்டு மணி நேர 'மரபு' இருந்ததை, நேரடித்தொலை பேசிச்சேவை தூக்கி வீசிய பின்னர், யாழ்ப்பாணம் – கொழும்பு – யாழ்ப்பாணம் இன்று சுலபமாக்கி விட்டபோதிலும், சுன்னாகம், காங்கேசன்துறை, பருத்தித்துறை பல சமயங்களில் பழைய நிலையில் அவுட் ஒவ் ஓடராக 'சாதனை' ஏற்படுத்தி விடுகிறது. இந்த நிலையில் –

கொழும்பிலிருந்து யாழ். மாவட்டத்திலுள்ள ஒரு பிரதம அலுவலகத்துக்கு அவசர அழைப்பு வந்தது.

யாழ். ஆஸ்பத்திரியில் ஆபத்தான கட்டத்தில் இருக்கும் தனது தாயாரின் நிலை குறித்து அறிந்துகொள்ள, 'அந்த' அலுவலகத்தில் வேலைபார்க்கும் சகோதரியுடன் கொழும்பு சகோதரர் ஏக்கத்துடன் தொடர்புகொண்டார்.

சகோதரி இருக்கத்தக்கதாகவே "ஆள் இல்லை" என்று பதிலளிக்கப்பட்டது, மீண்டும் அழைப்பு வந்தது. "ஆள் இல்லை"– ஒரே வார்த்தையில் 'லைன் கட்' ஆகிவிட்டது! அதாவது துண்டிக்கப்பட்டு விட்டது!

முக்கிய அலுவலகம்–முக்கிய பதவிவகிப்பவர்–கொழும்பிலிருந்து அவசர அழைப்பு... இதற்கே இப்படி என்றால் சாதாரணமானவர்களுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தால்..., 'எக்ஸ் சேன்ஜ்' மூலம் அழைப்பு பரவாயில்லை போல் தெரிகிறது! இந்த 'அலட்சிய மனோபாவ' விவகாரம்இப்பொழுது யாழ் அரசாங்க அதிபர், மாவட்ட அபிவிருத்திசபைத்தலைவர் ஆகியோரின் கவனத்துக்கும் சென்று விட்டது!

'ஊடுருவி'

## நித்தி-நிர்மலா...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பிரிகேடியர் ரணதுங்கா, மற்றைய பல்கலைக்கழகங்களின் ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

"நித்தியானந்தன் தம்பதிகளும் பல மத குருமாரும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தற்சமயம் கைது செய்யப்படல் இச்சட்டத்தின் செயற்பாட்டில் ஒரு புதிய கட்டத்தைக் குறிக்கின்றது இச்சட்டத்தினை எம்நாட்டிலுள்ள மனித உரிமை நிறுவனங்களும், பல்வேறு அரசியல்கட்சிகளும், தொழிற்சங்கங்களும், மக்கள் இயக்கங்களும், சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச நீதிச் சபை போன்ற பொறுப்பான சபைகளும் வன்மையாகக் கண்டித்துள்ளன. ஆகவே இவ்வேளையில் எதேச்சாதிகாரமாக மக்களைக் கைதுசெய்து தடுப்புக்காவலில் வைத்து மனிதாபிமானமற்ற நிலையில் விசாரணை செய்வதற்கு வழிவகுக்கும் இச்சட்டத்தினை நீக்குமாறு அரசாங்கத்திடம் வேண்டிக்கொள்கின்றோம்.

"நித்தியானந்தன் தம்பதிகளும் வேறு பலரும் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் தொடர்ந்து தடுத்து வைப்பதை நிறுத்தி அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். நாட்டின் சாதாரணமான சட்டங்களுக்கு அமைய நீதிபதிக்கு முன் விசாரணைக்கு உடனடியாக இட்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்."

இக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட நடவடிக்கைக் குழுவினர் யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் சு. வித்தியானந்தனை சந்தித்து, இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு வற்புறுத்தியுள்ளனர்.

இதைத் தொடர்ந்து உபவேந்தர்; யாழ் அரசாங்க அதிபரும், யாழ். மாவட்டச் செயலாளருமான திரு. தேவநேசன் நேசையாவுடனும், பிரிகேடியர் ரணதுங்காவுடனும் தொடர்பு கொண்டு ஆவன செய்வதாக உறுதியளித்தார்.

இதுவிஷயத்தில் நல்ல முடிவு கிடைக்காத பட்சத்தில், மீண்டும் இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுப்பது என்று ஆராயப்போவதாகவும் மேற்படி சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (மா)

ஆனைக்கோட்டை கொலைமுயற்சி வழக்கு :

# கைமோசக் குற்றத்தை எதிரி ஒப்புக்கொண்டார்!

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை கொலை முயற்சி வழக்கில் எதிரி கைமோசக்கொலைமுயற்சிக் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இவ்வழக்கு யாழ். மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் ஆனைக்கோட்டையில் 80 மார்ச் 23ல் த. பத்மநாதன் என்பவர் க. இரத்தினகுமாரை கொலை செய்ய முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் சட்டத்தரணி பி. தவபாலன் ஆஜரானர் அரச தரப்பில் சட்டத்தரணி கே. வி எஸ். ஸ்ரீகந்தகுமார் ஆஜரானர்.

எதிரி கைமோசக் கொலை முயற்சிக் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அரச சட்டத்தரணி ஏற்றுக்கொண்டார்.

எதிரிசார்பில் ஆஜரான சட்டத்தரணி தவபாலன் தமது உரையில் கூறியதாவது;

எதிரி திருமணமாகாதவர் அவர் கால் ஊனமுள்ளவர் ஒருபெண் அவரை கால் ஊனமுற்றவர் எனக்கூறியதால் ஆத்திரமடைந்து அவர்பேசிய போது அப்பெண் கூக்குரலிட்டார். அயலவர்கள் அவ்விடத்தில் வந்து அவரைத்தாக்க முற்பட்டபோது, இந்தக் கத்திக்குத்து நடைபெற்றுள்ளது. வந்தவர்கள் எதிரிக்குமுன்பின் தெரியாதவர்கள். கால் ஊனமுள்ள உனக்கு இதுவும் ஒரு கேடா? என்று ஏளனம் செய்ததால் ஆத்திரமடைந்து இதனைச் செய்துள்ளார். சாதாரணமனிதனக இருந்திருந்தால் ஆத்திர மூட்டக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்காது. திடீர் ஆத்திரமடைந்ததால் யாரால் கொடுக்கப்பட்ட ஆபதமோ தெரியவில்லை தன் நிலைமறந்து ஆத்திரமடைந்து இதனைச் செய்துள்ளார் என்பதை கவனத்திற்கு எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அவருக்கு வயது 27. 6 மாதம் றிமாண்டிலிருந்திருக்கிறர். கத்திக்குத்துக்கு இலக்கானவர் 2கிழமைக்குமுன்னர் வெளிநாடுசென்று விட்டார் என ஆதாரபூர்வமற்ற தகவல் கிடைத்துள்ளது இவற்றையும் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளுங்கள்.

நீதிபதி எதிரிக்கு 5 வருடம் ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து, இத்தவணைக்குள் வேறுகுற்றம் செய்தால், இத்தண்டனையும் அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தார். [க]

### ஆசிய விளையாட்டு: நீச்சல் போட்டியில் சாதனை

புதுடில்லி, நவ. 22.

புதுடில்லியில் நடைபெற்று வரும் ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப்போட்டியில் ஆண்கள் நீச்சலில் மேலும் இரண்டு சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளது. ஜப்பானிய வீரர்களே இவ்விரு சாதனைகளையும் நிலைநாட்டினர், [வெ]

### இன்று

[யாழ்ப்பாணம்]

வட இலங்கை சதுரங்கக்கழகத்தின்டரிசளிப்புவிழா இன்று மாலை யாழ். வீரசிங்கம்மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பரிசளிப்புவிழா வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா கலந்து கொள்ளவுள்ளார். [மா]

### கடைக்கு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வர் இருப்பதாககூறினீர் அங்கு பல சிங்களவர்கள் இருக்கிறர்கள் அதுவும் ஒருபொய் உமது தலையால் கதவை உடைத்ததாக கூறினீர் அதுவும் ஒரு பொய் உமது கடைக்கு 1000 பேர் வந்ததாகக் கூறினீர். உம்மை மதிதாக்க இரண்டொருவர்போதும். சிங்கள மக்களின் ஆதரவை பெற்று இனக்கலவரத்தைஏற்படுத்தவே இப்படி செய்தீர் உமக்கு பொலிசாரின் ஆதரவும் கிடைத்துள்ளது.

விசாரணை இன்று தொடர்ந்து நடைபெறும். (க)

### ஆசிரியர் சம்பள---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பளப்பணத்தை பெற்றுவந்து அறையில் வைத்து பங்கீடு செய்ததாகவும் கூறப்படுகிறது.

இளைஞர்கள் சுழிபுரம்பருளை வீதிவழியாக சென்றதாக தெரிவிக்கப்பட்டது. கல்லூரி அதிபர் திரு. க. அருணசலம் இதுபற்றி பொலிசில் புகார் செய்துள்ளார்.

சம்பவம் நடந்த சில நிமிடத்தில் அவ்வீதியால் வந்த காரைநகர் கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டதாகவும் அவர்கள் பொலிசிற்கும் இராணுவத்திற்கும் உடன் அறிவித்ததாகவும் கூறப்படுகிறது, பொலிஸ் இராணுவத்தினர் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

### மாணவர்கள்..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

குச்செல்லாதுபகிஷ்கரித்தனர்.

பணிப்பாளர் பேராசிரியர் ராஜரத்தினத்திடம் இதுபற்றி கேட்டபோது நிலைமைகள் சகஜ நிலைக்குத்திரும்பி மாணவர்கள் வகுப்புகளுக்கு சென்ற பின்னர்தான், தாம் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த தயார் எனத்தெரிவித்தார்.

### காலமானர்

சென்னை. நவ. 22

இசைமேதை பண்டிட் ரவி சங்கரின் சகோதரர் ராஜேந்திர சங்கர் காலமானர். இறக்கும்போது அவருக்கு 77வயதாகும்.

இவரின் மனைவி திருமதி லக்ஷ்மிசங்கர் ஹிந்துஸ்தான் இசையில் பிரபல்யம் பெற்றவராவர். [வெ]

### பிணையில் செல்ல அனுமதி

[கொழும்பு]

போலி அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்களை அச்சடித்ததாக குற்றம்சாட்டப்பட்ட சிறீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்கள் சேனகா அபயகுணசேகராவும், லெஸ்லியும் 30,000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்குசமுகமளிக்க வேண்டுமென்றும், நாட்டை விட்டு வெளியேறக்கூடாதென்றும் இவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

### ஜனாதிபதி யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

சர்வஜன வாக்கெடுப்புக்கு ஆதரவுபெறும் வகையில் யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கில் இம்மாதம் 26ம்திகதி நடைபெறவிருக்கும் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன உரைநிகழ்த்துவுள்ளார்.

ஜனாதிபதி விஜயம் தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கு பொலிஸ்மா அதிபர் திரு. உருத்திராராஜ சிங்கம் நேற்று யாழ் பொலிஸ் நிலையத்தில் மகாநாடொன்றை நடத்தினார். இம்மகாநாட்டில் வட பிராந்திய பொலிஸ் அதிபர், யாழ் பொலிஸ் அதிபர், உதவிப்பொலிஸ் பொறுப்பதிகாரிகள் கலந்து கொண்டனர். விமானத்தில் வந்திருந்த பொலிஸ் மா அதிபர் மகாநாடு முடிந்ததும், அதே விமானத்தில் கொழும்பு திரும்பியுள்ளார். [மா]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under numbre Q.B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.